கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை

2-2-1975

50 காசு



மக்கள் நம்பிக்கை என்னும் இனிதான சுமையை மகிழ்வுடன் ஏற்று செயல்படுவதே எங்கள் குறிக்கோள்.



60 ஆண்டு காலமாக உழைத்து உழைத்து நாங்கள் மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகியிருக்கிறோம்.

எனவேதான் சிறிய பார்சல்கள் முதல் பெரிய பார்சல்கள் வரை நாங்கள் பத்திரமாகக் கொண்டு போய்ச் சேர்ப்போம் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது.

இந்த நம்பிக்கைக்கு அடிப்படை இவைதான்:

- எங்கள் லாரிகள் அனைத்தும் எங்களுக்குச் சொந்தமானவையே. எனவே காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.
- அதிக அளவில் பார்சல்களை ஏற்றிச் செல்ல நிறைய டிரெய்லர்களும் எங்களிடம் உண்டு. எனவே காத்திருக்கத் தேவையில்லை.
- லாரிகளில் பழுதேற்பட்டால் வழித் தடங்களில் அமைந்துள்ள எங்கள் பட்டறைகள் உடனடியாகச் சீர் செய்கின்றன. எனவே தாமதம் தவிர்க்கப்படுகிறது.
- ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நேரிடையான பார்சல் சர்வீஸ் இருப்பதனால் நேரம் மிச்சப்படுகிறது. பார்சல்கள் இறக்கி ஏற்றப்படுவது தவிர்க்கப்படுவதால் சேதமும் விளைவதில்லை.
- தென்னகத்தின் பெரு நகரங்களுக்கிடையே மின்னல்வேக சர்வீஸ்களும் நடத்துகிறோம். எனவே உங்கள் பொன்னான நேரம் மிச்சப்படுகிறது.

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்

(டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)
மதுரை

உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்



FDS SR 1954 Tmg.

கண் மண் தெரியாமல் அடித்துச் சொரியும் மழையைப் பார்த்திருப்பீர்கள். ஆலங்கட்டி மழையைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். உங்களில் சிலர் இதைப் பார்த்துமிருக்கலாம். சிறுசிறு ஐஸ் கட்டிகளை வாரி இறைத்தால் எப்படி இருக்கும்? அம்மாதிரி ஐஸ் துண்டுகளாக மழை பெய்யும். கொஞ்ச நேரம்தான். ஆனால் நீங்கள் மீன் மழை, தவளை மழை என்று கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். அதிசயம்! ஆனால் உண்மை! சில பகுதிகளில் சில போது அபூர்வமாகத்தான் இத்தகைய மீன் மழையும் தவளை மழையும் பெய்யும். இது எப்படி? சாத்தியமா?



மீன் மழை!

வெகு நாட்களுக்கு முன்னே இம்மாதிரி மீன் 'தவளை மழைகளை ஏதோ பில்லி சூனியம், கெட்ட ஆவிகளின் சேஷ்டை என்று கருதி இதை அபசகுனம் என்றும் எண்ணினார்கள். ஆனால் இன்றைய ஆராய்ச்சி இதை மூட நம்பிக்கை எனத் தெளிவாக்கிவிட்டது. சுழல் காற்று என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். சில வேளைகளில் வீதி ஓரத்தில் உள்ள புழுதியும் குப்பையும் கூளமும் சுழன்று சுழன்று நகர்ந்து போவதைப் பார்க்கலாம். சுழிக்காற்று என்போம் இதை. இதுவே மிகப் பெரிய அளவில் வலுவாக வீசுமானால் 'டார்னேடோ' (tornado) சுழல் காற்று என்பார்கள். ஆகாயத்துக்கும் பூமிக்குமாக ஒரு பெரிய தூண் நிறுத்தியது போல மேலே விரிந்தும் கீழே சிறுத்தும் காணப்படும் இந்த டார்னடோ. இது நகர்ந்து செல்லக்கூடியது. இது போகும் பாதையில் எது இருந்தாலும் ஆடு, மாடு, குதிரை, வீடு, அவைகளை அப்படியே வாரிச் சுருட்டி உறிஞ்சி மேலே தூக்கிக் கொண்டு போய்விடும். இந்த டார்னடோ எப்படி ஏற்படுகிறது? மிகச் சூடான காற்று இலேசாகி மேலே கிளம்பும் போது அங்கு ஏற்படும் சூனியத்தை நிரப்ப நாலா பக்கங்களிலிருந்தும் குளிர்ந்த காற்று அங்கு ஓடிவருகிறது. வெப்பக் காற்றைக் குளிர் காற்று சுற்றிக் கொள்ள அப்போது மிகக் கடுமையான சுழல் காற்று ஏற்படுகிறது. குழல்போன்ற இதன் நடுப் பாகத்தில் காற்றின் வேகம் சில வேளைகளில் மணிக்கு 500 மைல்கள் வரை கூட இருக்கும். ஆனால் இது மிக மெதுவாகவே நகர்ந்து செல்லும். டார்னடோ உருவாகும் போது பலத்த மழையும் இடியும் உண்டாகும். டார்னடோ செல்லும் பாதையில் உள்ள அத்தனையும் தூள் தூள்தான். உயிருள்ள பசுவை வானத்துக்குத் தூக்கிப் போகும் டார்னடோ, அதை இரண்டு மைல்களுக்கப்பால் கொண்டு போய் மெள்ள மெள்ளக் கீழே இறக்கும்.

பூமியில் இப்படி ஏற்படும் சுழல் காற்றுக்கு டார்னடோ என்று பெயர். கடலில் இதே காற்றுக் குழல் உருவாகுமானால் அதற்குப் பெயர் வாட்டர் ஸ்பௌட் (water spout) பூமியில் உள்ள பொருள்களை இச்சுழிக் காற்று சுருட்டி உறிஞ்சிக் கொண்டு மேலே போவது போலக் கடலில் உள்ள நீரையும் அத்துடன் மீன்களையும் தவளைகளையும் அள்ளிக் கொண்டு போய் வேறோரிடத்தில் கொட்டும் — மழையாக. மீன் மழை, தவளை மழை பெய்வது இம்மாதிரிக் கடலில் ஏற்படும் சுழல் காற்றினால்தான். சிலவேளைகளில் நதி, ஏரிப் பகுதிகளிலும் இத்தகைய காற்று உருவாகி, அதில் உள்ள ஜீவராசிகளை அள்ளிக் கொண்டு போய் வேறோரிடத்தில் மழையாகப் பெய்யும்.

கோகுலம்

மலர் 3 ☐ இதழ் 22

பிப்ரவரி 2, 1975

ஆனந்த, தை 20



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மை யென்று
தானறிதல் வேண்டும்
— பாரதியார்

சந்தா விவரம்:

உள்நாடு:

ஒரு வருடம் ரூ. 13-00

ஆறு மாதம் ரூ. 6-50

வெளிநாடுகள்:

ஆண்டுச் சந்தா ரூ. 25-00

கடவுளுக்கே கண் தந்தார்!

தமிழ் நாட்டின் எல்லையைக் கடந்தவுடன் ஆந்திர மாநிலத்தில் உள்ளது சித்தூர் மாவட்டம். அங்கு ஆதிகாலத்தில் வேடர்களால் ஆளப்பட்ட ''பொத்தப்பி'' என்ற மலைக் காட்டுப் பகுதி இருந்தது. உடுப்பூர் என்பது அதன் தலைநகரம்.

அங்கே நாகன் என்ற வேட்டுவ மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். தத்தை என்பவள் அவன் மனைவி. தங்களுக்கு ஒரு பிள்ளை இல்லையே என்பதுதான் இவ்விருவருக்கும் பெரிய குறையாக இருந்தது. மலைக் காடுகளான குறிஞ்சி நிலத்தின் கடவுளாகிய முருகப் பெருமானிடம் இவ்விருவரும் வேண்டிக் கொண்டனர். ஸ்வாமி சந்நிதியில் மயில்களையும் சேவல்களையும் அர்ப்பணம் செய்து பெரிய விழா நடத்தினர்.

முருகன் மனம் மகிழ்ந்தார்.

அடுத்த ஆண்டில் தத்தை ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தான். குழந்தையைக் கையில் எடுத்த நாகன் அது கொழுகொழுவென, திண்ணென, இருந்ததால் மிகவும் மகிழ்ந்தான். ஆகவே குழந்தைக்குத் திண்ணன் என்றே பெயரிட்டான்.

திண்ணன் உடல், அறிவு இரண்டிலும் செவ்வனே வளர்ந்து வந்தான். உரிய பருவம் வந்தவுடன் அவனுக்கு வேடர்க்குரிய வில் வித்தை முதலானவை கற்பிக்கப்பட்டன. திண்ணன் அவற்றிலே வியக்கத்தக்க தேர்ச்சி பெற்றான்.

நாகரிக உலகத்தின் பழக்க வழக்கங்களை அந்த வேடர்களுக்குத் தெரியாது. ஆனால் அவர்களுக்கென்று ஒரு பண்பு, ஒருசில வித்தைகள், ஒருவிதமான வழிபாட்டு முறை ஆகியன உண்டு. இவையெல்லாவற்றிலும் திண்ணன் தேர்ச்சி பெற்றான்.

நாகனுக்கு முதுமை ஏற்பட்டது. எல்லாத் தகுதிகளையும் அடைந்து விட்ட பிள்ளைக்குப் பட்டம் கட்டி





விட்டுத் தான் ஓய்வு பெற விரும்பினான். திண்ணனை வேட்டைக்கு அனுப்பி வைத்து, அவன் நன்கு வேட்டையாடித் திரும்பிவிட்டால், உடனே அரசாட்சியை அவனிடம் தந்துவிட வேண்டும் எனத் தீர்மானித்தான்.

தெய்வத்தின் ஆவேசம் பெற்று, அதன் சக்தியால் வருங்காலம் உணர்ந்து குறிசொல்லும் தேவராட்டிகள் என்ற பெண்கள் வேட்டுவ இனத்தில் உண்டு.

இப்படிப்பட்ட தேவராட்டி ஒருத்தியை நாகன் வரவழைத்து, ''என் மகனைக் கன்னி (முதலாவது) வேட்டைக்கு அனுப்பப் போகிறேன். வெற்றிகரமாகத் திரும்புவானா? அதன் பிறகு அவனை அரசனாக்கப் போகிறேன். என் போல் அவனும் சிறப்பு அடைவானா?'' என்று வினவினான்.

தேவராட்டி திண்ணனின் எதிர்காலத்தைப் பார்த்தாள். அது மிகவும் அற்புதமாக இருந்தது. ஆனாலும் நாகன் நினைக்கும் விதத்தில் அது இல்லை. அந்த எதிர்கால அற்புத வாழ்க்கையைப் பற்றி இப்போதே விண்டு கூறிவிடக் கூடாது என எண்ணினாள் தேவராட்டி. எனவே சாமர்த்தியமாக, ''திண்ணனின் வாழ்க்கைப் பயனுக்கே இந்தக் கன்னி வேட்டைதான் உயிர்நாடியாக இருக்கப் போகிறது. எதிர்காலத்தில் இவன் உன்னைவிடப் பெரிய அளவில் மேம்பட்டு நிற்கப் போகிறான்'' என்று மட்டும் கூறினாள்.

அதன் உட்பொருள் அறியாத நாகன் மகிழ்ச்சியோடு மகனை வேடர் கணங்களோடு வேட்டைக்கு அனுப்பி வைத்தான்.

கட்டுமஸ்தான தேகமும், அழகும் கொண்ட திண்ணன் வேட்டைக் கோலம் புனைந்தபோது பேரழகனாக இருந்தான்.

பேரழகனாக மட்டுமின்றிப் போரழகனாகவும் தன்னைக் காட்டிக் கொண்டான் அந்த முதல் வேட்டையிலேயே. ஏராளமான விலங்குகளைக் கொன்று குவித்தான். கருநிற அழகனான அவன் அம்புகளை இடையறாமல் எய்தது, கருமேகம் ஒன்று மழைத் தாரைகளை வருஷிப்பது போல் இருந்ததாம்!

மென்மையான மானிலிருந்து வன்மையான புலி, கரடி வரையில் யாவும் திண்ணனின் வீரத்துக்கு இரையான போது, ஒரே ஒரு காட்டுப் பன்றி மட்டும், ''என்னிடம் உன் சக்தி சாயுமா?'' என்று கேட்பது போல் அவனது அம்புக்கு அகப்படாமல் நழுவி நழுவிச் சென்றது.

உடன் சென்ற வேடர்கள் உடனே ஓர் உறுதியான வலையை வீசி அதைப் பிடித்தனர். ஆனால் வலு மிகுந்த அவ்வராகமோ நொடியிலே அந்த வலையையும் அறுத்துவிட்டு, காற்றைவிடக் கடிதாகக் கானகத்துள் ஓடியது.

அதன் வேகத்துக்குச் சரியாக ஏனைய வேடரால் ஓட முடியவில்லை. திண்ணன் மட்டுமே ஓடினான்.

அவனது உயிர் நண்பர்களான நாணன், காடன் இருவரும் ''ஆ! நம் இளவரசர் திண்ணனார் இப்பயங்கர வனத்தில் தனித்துச் செல்ல, நாம்

பின்தங்கி நிற்கலாமா?'' என்று துடித்தனர். நட்பு, ராஜ விசுவாசம் இவற்றால் தங்களைத் தாங்களே உசுப்பிக் கொண்டு, தடங்கும் கால்களைத் தெம்பாக்கிக் கொண்டு திண்ணனை இவர்களும் பின்பற்றிப் பிடித்தனர்.

மாளாத ஓட்டம்! கடைசியில் பன்றியும் களைத்துவிட்டது. தெய்வ சங்கற்பப்படி எந்த இடத்துக்குத் திண்ணனைக் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமோ அங்கே அது வந்தாகி விட்டது! எனவே மலைச்சாரலில் ஒரு மர நிழலில் சோர்ந்து நின்றுவிட்டது.

திண்ணன் அதற்கு வெகு அருகில் வந்து விட்டான். அம்பு எய்வதற்கு வேண்டிய இடைவெளி கூட இருவருக்கும் இடையே இல்லாததால் உடை வாளாலேயே அதைக் குத்தி, ஒரே வீச்சில் இரண்டாக்கினான். இத்தனை ஓட்டத்துக்குப் பின்பும் அத்தனை பலம் அவனுக்கு!

நாணனும் காடனும் மூச்சு முட்ட அங்கு வந்து சேர்ந்தனர். திண்ணனார் பன்றி மேல் கொண்ட வென்றி (வெற்றி) கண்டு அவர்களுக்கு ஒரே பூரிப்பாகி விட்டது.

எல்லோரும் சிறிது நேரம் ஆனந்தமாக இளைப்பாறினர்கள்.

''வெகு நேரம் நெடுந் தொலைவு ஓடிவந்ததில் கொடிய பசி ஏற்பட்டிருக்கிறது. இதோ செத்துக் கிடக்கும் இந்தப் பன்றியின் மாமிசம் மிகச் சுவையாக இருக்கும். மரக் கோல்களைக் கடைந்து அதிலிருந்து தீமூட்டி இதன் ஊனைப் பக்குவம் செய்து உண்ணலாமே!'' என்றனர் நாணனும் காடனும்.

வேடர் நாகரிகம்தான் நம் நாகரிகத்துக்கு வேறு விதமானது என்று சொல்லி விட்டோமே! நமக்கு அருவருப்புத் தரும் பல விஷயங்கள் அவர்களுக்குப் பெரும் உவப்பாக இருக்கும்!

திண்ணன் புத்திசாலி அல்லவா? அவர்களைக் கேட்டான்: ''அது சரி, புலால் உண்டவுடன் தாகம் எடுக்குமே! நாணா, நீ இங்கே என் தந்தையுடன் வேட்டைக்கு வந்திருக்கிறாயே, உனக்குத் தெரியுமா இங்கே நீர் உள்ள இடம்?''

''தெரியும் ஐயனே! இதோ இந்தத் தேக்க மரத்தைத் தாண்டினால் அதோ தெரிகிற அந்த மலைக்குப் பக்கத்தில் ஓர் ஆறு ஓடுகிறது. அதற்குப் பொன் முகலியாறு என்று பெயர்'' என்றான் நாணன்.

''அதோ அந்த மலை'' என்று நாணன் காட்டிய மலையைக் கண்ட மாத்திரத்தில் திண்ணனின் நெஞ்சு திண்ணென விம்மியது. அவன் முகமே பொன்னானது போல் பொலிந்தது.

ஏன், ஏன்?

அவனுக்கே தெரியவில்லை.

பன்றியின் உடலைத் தூக்கிக்கொண்டு திண்ணனும், காடனும், நாணனும் ஆற்றங்கரைக்குப் புறப்பட்டார்கள்.

அரைக் காதம் நடந்த பின் மலை நன்கு புலப்பட்டது. அதிலேயே திண்ணனின் கண்ணும் எண்ணமும் புதைந்தன.

''இதுதான் திருக்காளத்தி மலை. அதன் உச்சியில் குடுமித் தேவர் இருக்கிறார்'' என்று நாணன் சொன்னானோ இல்லையோ, திண்ணனை ஒரு பரவச உணர்ச்சியே ஆட்கொண்டது!

திருக்காளத்தி! 'திரு' என்றால் 'லக்ஷ்மி!' 'ஸ்ரீ' என்றும் அவளைச் சொல்வார்கள். ஸ்ரீ காளஹஸ்தி என்பதே திருக்காளத்தி யாயிற்று.

'ஸ்ரீ' என்றால் 'சிலந்தி' என்றும் பொருள்- 'காளம்' என்றால் 'பாம்பு' 'ஹஸ்தி' என்றால் ஹஸ்தத்தை உடையது. ஹஸ்தம் என்றால் கை. கையை (அதாவது துதிக்கையை) உடைய ஒரே மிருகமான யானைக்கு 'ஹஸ்தி' எனப் பெயர். (கரம் இருப்பதாலேயே இதற்குக் கரி என்றும் பெயர்) ஒரு சிலந்தி ஒரு பாம்பு, ஒரு யானை ஆகிய பூச்சிகளும் மிருகங்களும் கூடச் சிவபெருமானை வழிபட்டுச் சிவலோகத்தை அடைந்திருக்கின்றன. அவை வழிபாடு செய்த இடமே இந்தத் திருக்காளத்தி. 'குடுமி' என்றால் மலைச் சிகரம். மலை உச்சியில் உள்ள காளத்தி நாதரே 'குடுமித் தேவர்!'

''யானைக்கும், பாம்புக்கும், சிலந்திக்கும் கிடைத்த அருள் நாகரிகமறியாத வேட்டுவனான எனக்குக் கிடைக்காமல் போகுமா?'' என்று திண்ணனின் உள்ளம் ஆர்ப்பரித்தது. தாகம் தீர நீர்நிலை அடையு முன் இந்த அருள் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற தாபம் மூண்டது.

காளத்தி மலையில் ஏறினால் ஒரு பக்கம் பொன்முகலி கண்ணுக்குத் தெரிந்தது. மறுபுறம் அதன் உச்சியில் குடுமித் தேவர் இருக்கிறார் — அவர் கண்ணுக்குத் தெரியவில்லை. இருந்தாலும் ஏனோ அவரே திண்ணனின் மனத்தைச் சுண்டிச் சுண்டி இழுத்துக் கொண்டிருந்தார்.

''குடுமித் தேவரை முதலில் தரிசிப்போமே!'' என்றான் திண்ணன்.

பசி, தாகத்தின் கொடுமையால் அவ்விருவரும் இளவரசரையும் எதிர்த்து, ''முதலில் இந்தப் பன்றி ஊனைப் பக்குவப்படுத்தி உண்போம். நீர் அருந்து



வோம். பிறகுதான் தரிசனம். இப்போதே இந்த மலையில் எங்களால் ஏற முடியவில்லை. ஒரே பாரமாக இருக்கிறது — மூச்சு வாங்குகிறது'' என்றனர்.

''அப்படியா? எனக்கென்னவோ இம்மலைமீது ஏற ஏறத்தான் பாரம் எல்லாம் குறைகின்றாற் போலிருக்கிறது'' என்றான் திண்ணன்.

ஒவ்வொரு பிறவியிலும் நாம் செய்கிற பாவம்தான் பெரிய பாரம். இந்தப் பாரம் முழுவதும் இறங்கி விட்டால் ஸ்வாமியோடு சேர்ந்து விடலாம். அப்புறம் ஒரே ஆனந்தம்தான். பாவ பாரத்தைக் குறைத்துக் கொள்ளவே ஸ்வாமி தரிசனம், ஸ்தோத்திரம், பூஜை, தவம் எல்லாம் இருக்கின்றன. இவற்றை நாம் மேற்கொண்டால் பாவச் சுமை குறைந்து வரும். கடைசியில் இல்லாமலே போகும். அடியோடு பாவம் இல்லாமல் போகிறவரையில் பிறவி எடுத்துக்கொண்டே இருப்போம்.

அடியோடு பாவம் தீராததால்தான் திண்ணன் வேடனாகப் பிறவி எடுத்திருந்தான். ஆனாலும் சென்றுபோன ஜன்மங்களில் அவன் தவமும் நிறையச் செய்திருந்தான். பாவப் பலன் எல்லாம் தீர்ந்து போகிற சமயம் இப்போது வந்து விட்டதால் அந்தப் பழைய தவத்தின் புண்ணியப் பலன் இப்போது இவனை வந்து பற்றியிருக்கிறது! குடுமித் தேவரின் சந்நிதிக்கு இவனைத் தள்ளுகிறது!

ஆனாலும் நண்பர் இருவரோ இவனைனன் தின்னுவதற்கு இழுத்தார்கள்.

பொன்முகலி ஆற்றங் கரையில் பன்றிச் சமையல் தொடங்கிற்று. காடன் தான் தீக்கடைகோல் என்ற விறகுகளை ஒன்றோடொன்று உரசி, நெருப்பு மூட்டி, அந்த நெருப்பில் பன்றியின் தசைகளைப் பக்குவம் செய்தான். ஆற்றங்கரையில் கழித்துச் செல்லும் குளிர் காற்றில் அது வேக மிகவும் நாழிகை பிடித்தது.

குடுமித் தேவரைக் காணாமல் திண்ணனால் பொறுத்திருக்க முடியாமலே போயிற்று.

''இது வேக ஜாமமாகும் போலிருக்கிறது. ஏ காடா, நீ ஒருத்தன் இங்கே இதைப் பக்குவம் செய்தால் போதும்.



1. என்ஜினியர் 'How is That?' கேட்கிறார். ○ 2. அம்பயர் 'அவுட்' கொடுக்கிறார். ○ 3. காளிசரண் - மண்டியிட்டு மட்டையைச் சுழற்றுகிறார். ○ 4. சரீனிட்ஜ் - கீழே விழுந்து 'காட்ச்' பிடிக்கிறார். ○ 5. ஹோல்டர் - போல் பண்ணுகிறார். ○ 6. கேக்வாட் - ரன் எடுக்கிறார். ○ 7. விசுவநாத் - ''காளிசரணுக்குத்தான் மண்டியிட்டு மட்டை வீசத் தெரியுமா - எனக்குத் தெரியாதா?''

நானும் நாணனும் மலைமேல் சென்று ஸ்வாமியைத் தரிசித்துத் திரும்புகிறோம்'' என்று சொல்லி, துள்ளிப் புறப்பட்டான்.

நாணனும் அவன் பின்னே ஓடினான்.

மலைக்காட்டு உச்சியில் இங்கேதான் காளத்தீசரான குடுமித் தேவரின் லிங்கம் இருக்க வேண்டும் என்று உள்ளுணர்ச்சி திண்ணனைப் பிடரியைப் பிடித்து உந்த, அத்திசை நோக்கி ஓடினான் அவன்.

'ஆஹாஹா! இதோ—ஆம், குடுமித் தேவரேதான்!'

திண்ணனின் இதயமே ஆனந்தத்தில் வெடித்துவிடும்போலப் பூரித்தது. வேடனின் கடின மனம் இளகிற்று-உருகிற்று!

மலையுச்சியில் ஒரு மரத்தடியில் லிங்க ரூபத்தில் ஸ்வாமி விளங்குகிறார்! (இன்று காளத்தியில் லிங்கத்தைச் சுற்றியுள்ள சந்நிதி, கோயில் எல்லாம் பிற்காலத்தில் அமைத்தவைதான். ஆதி காலத்தில் ரிஷிகள் நதியோரத்திலும், வன விருட்சத்தடியிலும் பூஜித்த தெய்வ மூர்த்திகள் அந்தந்த இயற்கைச் சூழலிலேயேதான் இருந்தன.)

திண்ணனின் கண்கள் லிங்கத்திலிருந்து மறுபடி எடுக்க முடியாதுபோல் அப்படியே ஆழப் பதிந்து விட்டன. வேறு விதத்தில் அவை பதியப் போவதைப் பிறகு படிப்பீர்கள்.

ஓர் அதிசயம் நிகழ்ந்தது. இதுவரை திண்ணன் சதை, தசை, நாடி, நரம்பு, ரத்தம், எலும்பு முதலியவற்றால் ஆன உடல் ஒன்று தனக்கு இருப்பதாக நினைத்து வந்தான் அல்லவா? இப்போது அந்த உடல், சதை, தசை, நாடி, நரம்பு, ரத்தம், எலும்பு எல்லாமே இற்றுவிட்டாற் போல் ''அனைத்தும் ஒரே அன்பு, அன்பு, அன்பு மயமாகி விட்டது போலிருந்தது! (தொடரும்)



நம்பர் ப்ளீஸ்!

கோபு ரொம்பக் கோபமாக இருந்தான். அவமானப்பட்ட மாதிரி அவன் முகம் கடுகடுப்பைக் காட்டியது. அப்போது அங்கு கிட்டுவும் பட்டுவும் வந்து சேர்ந்தார்கள்.

''மகாப் பெரிய மந்திரவாதி, தந்திரசாலி என்று தம்பட்டம் அடித்துக் கொண்டாயே. உன்னை நம்பி நான் மூக்குடை பட்டேன்'' என்றான் கோபு.

''உன் மூக்கு நன்றாகத்தானே இருக்கிறது!'' என்றான் கிட்டு குறும்பாக அவன் மூக்கைத் தொட்டுத் தடவியபடியே. கோபுவின் கோபம் தணியவில்லை. கிட்டுவின் கையைத் தட்டிவிட்டுவிட்டு, ''பையிலிருக்கும் சில்லறையையும் என் வயதையும் சொல்லுகிறேன் என்று ஒரு 'டிரிக்' பண்ணினாயே அன்று...'' என்று இழுத்தான்.

''ஆமாம்!'' என்றான் கிட்டு.

''என் மாமா பிள்ளை மணிக்கு நான் அந்தக் கோகுலம் இதழை அனுப்பி இருந்தேன். அதில்தான் என் மூக்கு உடைபட்டது'' என்றான் மூக்குச் சிவக்கக் கோபு.

''இப்போது புரிகிறது'' என்றான் கிட்டு. ''அந்த இதழ் கோகுலத்தில் ஒரு சின்னத் தப்பு நேர்ந்துவிட்டது. அச்சுப் பிழை என்று ஆசிரியர் வருத்தப்பட்டு எழுதி யிருந்தார். மாஜிக் வேலையை மாதிரிக்குப் போட்டுக் காட்டும்போதுதான் அந்தத் தப்பு ஏற்பட்டிருக்கிறது. ஐம்பதால் பெருக்கி வந்த விடையிலிருந்து 365ஐக் கழிக்க வேண்டும் இல்லையா? அதைச் செய்யாமல், அதை அடுத்துப் பையில் உள்ள சில்லறையைக் கூட்டி வரும் தொகையைக் கழித்து வந்த விடையாகக் காட்டி விட்டார்கள். 1750-365=1385 என்று காட்டி அதன் பிறகு 'பையில் உள்ள சில்லறையைக் கூட்டிக் கொள்ள' என்று போட்டு 1385+65=1450 என்று போடுவதற்குப் பதில் 1750—365=1450 என்று போட்டு விட்டார்கள். கோளாறு இதில்தான். என் மாஜிக்கில் இல்லை'' என்றான் கிட்டு.

''அது சரி, இன்று என்ன வேலைத்தனம் செய்து காட்டப் போகிறாய்?'' என்றான் கந்தன்.

''அதுவா? உன் அப்பா ஆபீசின் டெலிபோன் எண்ணையும் உன் வயதையும் நீ கூறாமலேயே சொல்லிவிடுகிறேன்'' என்றான் கிட்டு. ''ஆனால் அந்த டெலிபோன் எண் ஐந்து ஸ்தானம் உள்ளதாக இருக்க வேண்டும்.''

''ஐந்து ஸ்தான இலக்கம்தான்....''

''அப்படியானால் அதை ஒரு காகிதத்தில் எழுதிக் கொள்'' என்றான் கிட்டு.

''எழுதிக் கொண்டேன். (அவன் எழுதிக்கொண்ட எண் 66104)

அதை இரண்டால் பெருக்கு
(66104×2=132208)

அந்த விடையுடன் 5க் கூட்டு.
(132208+5=132213)

வரும் விடையை 50ஆல் பெருக்கு.
(132213×50=6610650)

உன்னுடைய வயதை அத்துடன் கூட்டிக் கொள்.
(6610650+15=6610665)

அத்துடன் ஒரு வருடத்தின் நாட்களையும் கூட்டிக் கொள்.
(6610665+365=6611030)

''கிடைத்த விடையைக் கூறு'' என்றான் கிட்டு. கந்தன் அதைக் கூறச் சில விநாடிகள் கண்களை மூடிக் கொண்டிருந்த கிட்டு உன் அப்பாவோட ஆபீஸ் டெலிபோன் எண் 66104தானே? உன் வயது பதினைந்தா?'' என்று கேட்டான். கந்தன் 'கிர்' அடித்துப் போய் உட்கார்ந்தான்.

''எப்படிடா, எனக்கும் சொல்லிக் கொடுடா!'' என்ற பல குரல்களுக்குப் பதிலாகக் கிட்டு கூறுவான் ''வருஷத்தின் நாட்களான 365ஐக் கூட்டியபின் அவர்கள் சொல்லும் விடையிலிருந்து 615ஐக் கழிக்க வேண்டும். இதுதான் ரகசியம். முதல் ஐந்து இலக்கம் போன் நம்பர், கடைசி இரண்டு எண்கள் அவர்கள் வயது! கவனமாகப் போட்டுப் பார்த்தால் தவறே ஏற்படாது.



தேசதேசக் கதைகள்: செக்கோஸ்லோவேகியா

பனி மலர் அழகி

— வாண்டுமாமா —

மாரிக் காலத்தில் முதன் முதலாகப் பூப்பூவாக உதிரும் வெண் பனித் தூளைக் கண்டு செக்கோஸ்லோவேகியக் குழந்தைகள் மகிழ்ச்சியால் கூத்தாடுவார்கள். வீட்டு மேலெல்லாம் வீதியிலெல்லாம் மரங்கள் மீதெல்லாம் வெண்பனி உதிர்ந்து மூடியிருக்கும். எங்கும் ஒரே வெண்மை. குழந்தைகளுக்கோ கொண்டாட்டம். வெண் பனித் தூளை அள்ளி எடுத்து அமுக்கிப் பிடித்துப் பந்தாக்கி ஒருவர் மீது ஒருவர் வீசி விளையாடுவார்கள். பனித் தூளைக் குவித்துச் சேர்த்து மனித உருவங்களை உருவாக்கி மகிழ்வார்கள்.

அந்தக் கிராமத்துக் குழந்தைகள் குதூகலமாகப் பனி உறைந்த மைதானத்தில் பளீரென்று வீசும் சூரிய ஒளியில் குளித்தபடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். இரவெல்லாம் பனி விழுந்து முடிந்த பிறகு காலை வெகு நேரம் கழித்துத் தலை நீட்டும் சூரியனுக்கு வெப்பம் கிடையாது. வெளிச்சம் மட்டுமே இருக்கும்... தங்கள் சிறிய வீட்டின் ஜன்னலருகே அமர்ந்து, இவானும் அவன் மனைவி மேரியும் குழந்தைகளின் குதூகலத்தை ரசித்து மகிழ்ந்து கொண்டிருந்தனர். அந்த மகிழ்ச்சியினூடே அவர்கள் நெஞ்சத்திலே ஓர் ஏக்கமும் அழுத்திக் கொண்டிருந்தது. அப்படி என்ன ஏக்கம்?

இதே மாதிரி நம் வீட்டிலும் குழந்தைகள் விளையாடவில்லையே என்ற ஏக்கம்தான். அவர்களுக்குக் குழந்தை இல்லை. குழந்தை இல்லாக் குறை இவானைவிட மேரியை ரொம்பவும் வாட்டியது. மனைவியின் வேதனை கப்பிய முகத்தைக் கண்ட இவான் அவளை உற்சாகப் படுத்த, "மேரி! அதோ பார், தோட்டத்தில் அன்னு பனிமனிதனை உருவாக்க முடியாமல் தவிக்கிறாள். நாம் போய் அந்தச் சின்னப் பெண்ணுக்கு உதவலாமா?" என்றான்.

மேரிக்கும் அது உவப்பாகப் பட்டது. "அன்னுவுக்கு நாம் அவசியம் உதவலாம் வாருங்கள். பனி மனிதனைச் செய்ய வேண்டாம். அன்னுவைப் போலவே அழகான ஒரு பனிப் பெண்ணை உருவாக்கலாம்" என்றாள் மேரி. இருவரும் கோட்டும் குல்லாயும் அணிந்து அன்னு விளையாடிக் கொண்டிருந்த இடத்துக்குப் போனார்கள். தன் உள்ளத்து ஏக்கத்தை எல்லாம் வெளிப்படுத்தும்படியாக, அந்த வெள்ளைப் பனித் தூளிலே உயிருள்ள பெண்ணைப் போல ஓர் அழகிய பெண்ணை உருவாக்கி விட்டார்கள் இவானும் மேரியும். அது ஓரளவு உருவாகும்போதே சிறுமி அன்னு ஓடிவிட்டாள், தன் தோழிகளுடன் வேறு விளையாட்டு விளையாட. ஆனால் கிழட்டுத் தம்பதிகள் பனிப் பெண்ணைப் பக்குவமாக உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். அநேகமாக எல்லாம் முடிந்து விட்டது. இவான் பனிக் குழந்தை சிரிப்பது போல் வாய் அமைத்தான். அப்போது அவன் தன் கையை அதிர்ச்சியுடன் பின்னுக்கு இழுத்துக் கொண்டான். ஏன்? அந்தப் பனிப் பெண்ணின் வாயிலிருந்து கதகதப்பான மூச்சுக் காற்று அவன் கையில் பட்டது. பீதியுடன் அந்தப் பனிப் பொம்மைப் பெண்ணின் கண்களைப் பார்த்தான். அது இவர்களைப் பார்த்துச் சிரித்தது.

"இதென்னது...?" பதறிப்போன இவான், "இது ஏதோ சூனியக்காரியின் வேலை" என்று ஒதுங்கி ஓடலானான். பனித் தூளினால் ஆன பொம்மை உயிர் பெற்றால் யாருக்குத்தான் பயமாக இருக்காது?

ஆனால் கிழவி மேரி பயப்படவில்லை. அதைப் பாக்கியமாகக் கருதினாள்.

''இவான்! இது இறைவன் நமக்கு அளித்த பரிசு. இது நம் குழந்தை'' என்று கூறி அன்போடு அந்தப் பனிப் பொம்மையை அணைத்துக் கொண்டு முத்தமிட்டாள். அந்தப் பனிப் பெண் குழந்தை தன் மீதிருந்த பனித் தூளை உதறிக் கொண்டது. தனக்கு அளிக்கப்பட்ட முத்தங்களுக்குப் பதில் முத்தம் கொடுத்தாள் உயிர் பெற்று விட்ட அந்தப் பெண். இவானுக்கும் மேரிக்கும் எப்படி இருக்கும்? மகிழ்ச்சியான மகிழ்ச்சி! ஆனந்தமான ஆனந்தம்! பனி மலர் அழகி என்றே அந்தப் பெண்ணுக்குப் பெயர் சூட்டித் தங்கள் வீட்டுக்கு அழைத்துப் போனார்கள்.

வெள்ளை வெளேர் என்றிருந்தாள் அந்தப் பெண். கண்கள் நீலமாக இருந்தன. கூந்தல் நிலவொளியைப் போலத் தங்கமாகத் தகதகத்தது. கிழட்டுத் தம்பதிகளிடம் அன்பாகவும் ஆதரவாகவும் இருந்தாள். பனி மலர் அழகியை மகளாகப் பெற்றதில் அவர்களுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது. விநாடிக்கு விநாடி, நாளுக்கு நாள் அழகாக வளர்ந்து வந்தாள் அந்தப் பனிப் பெண். புதிய பெண்ணுடன் கிராமத்துக் குழந்தைகள் எல்லாம் விளையாட ஓடிவந்தன. பல ஆண்டுகளாக ஆரவாரமின்றிக் கிடந்த அந்தக் குடிசையில் இப்போது ஒரே குதூகலமாக இருந்தது. எப்போதும் குழந்தைகள் அங்கு குழுமியிருந்தார்கள். ஆடி ஓடினார்கள். பனி மலர் அழகிக்குப் பல விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுத்தார்கள். குழந்தைகள் எல்லாம் அவளை நேசித்தார்கள். அவளும் கிராமத்துக் குழந்தைகளை நேசித்தாள்.

நீண்ட மாரிக் காலம் மெள்ள மெள்ள நகர்ந்து கொண்டிருந்தது. இளவேனில் காலத்துச் சூரியன் கன்ளென்று வீசலானான். நிலத்திருந்து பசேல் என்று புல் பூண்டுகள் தலை நீட்டின. கிராமத்துப் பெண் குழந்தைகள் கை கோத்துக் கொண்டு வளையமாக ஆடிப் பாடி மகிழ்ந்தார்கள் வசந்தத்தை வரவேற்று. பனி மலர் அழகி அந்தக் . குழந்தைகளோடு சேர்ந்து ஆடவில்லை. தங்கள் மகளிடம் விசேஷமான மாறுதலைக் கண்டார்கள் இவானும் மேரியும். மற்ற குழந்தைகளோடு பனிப் பெண் வயல் வெளிகளில் விளையாடப் போகவில்லை. அழைத்தாலும் கூடப் பிடிவாதமாக வர மறுத்தாள். ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்தபடியே மற்றவர்கள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் சோகம் அப்பிக் கிடந்தது.

'' என்னம்மா உன் உடம்புக்கு ?'' என்று கேட்ட மேரியிடம், ''ஒன்றுமில்லை பாட்டி, நான் ஆரோக்கியமாகத்தான் இருக்கிறேன்'' என்பாள் பனி மலர் அழகி.

கோடைச் சூரியன் தன் கிரணங்களால் உலகைக் கோலாகலத்தில் ஆழ்த்தினான். ஓடைக் கரை எங்கும் வண்ணப் பூவிரிப்பால் மூடினான். பறவையின் கீதத்தால் காற்று கனக்கலாயிற்று. பனி மலர் அழகியைச் சுற்றி மகிழ்ச்சி வளர வளர அவளிடம் சோகம் பெருகலாயிற்று. மற்ற குழந்தைகளிடமிருந்து ஒதுங்கி ஒளியலானாள். இருள் மிகுந்த இடம் தேடிச் சுருண்டு முடங்கினாள். மரங்கள் அடர்ந்த ஓடைக் கரை ஓரங்களிலே தனியாக ஒளிந்து நடக்கலானாள். சூரியன் வருவதற்குள் திரும்பிவிடுவாள்.

ஒரு நாள் கோடை மழை கொட்டி முழக்கிற்று. உக்கிரமான கோடையை ஓங்கி அடித்துவிட்டு ஓடியது பெரு மழை. அதைக் கண்டு கைகொட்டிச் சிரித்து மகிழ்ந்தாள் பனி மலர்



படம் எடுக்க ஹாஜி மஸ்தான் கோடி தந்ததால் - அதன்
பாவமெல்லாம் கைவிலங்காய்த் தேடி வந்ததாம் - என்னைப்
'படம்' எடுக்கச் செய்து வாட்டும் மோடி மஸ்தானை – நீ
பணம் கொடுத்து வேடிக்கைதான் பார்ப்பதென்னவாம்?

- குடுக்கையார்

வண்ணப் படம்: ஹரிகோபால்.



அழகி. நீண்ட நாட்களுக்குப் பிறகு தன் மகளிடம் மகிழ்ச்சியைக் கண்ட மேரி பூரித்துப் போனாள். ஆனால் மழை ஓய்ந்து சூரியன் பளீரிட்டு நிலம் காய்ந்தபோது அவள் விம்மி விம்மி அழுதாள், அருமைத் தோழியை இழந்தவளைப்போல.

கோடையின் மத்திய காலம். கிராமத்துக் குழந்தைகளுக்குக் கொண்டாட்டமான காலம். பகலெல்லாம் ஆடிப் பாடி மகிழும் குழந்தைகள் மாலை மயங்கும் வேளையில் கிராமத்தின் கோடியில் சொக்கப்பனை கொளுத்தி மகிழ்வார்கள். காய்ந்த இலை, குப்பை, சுள்ளிகளைக் குவித்துத் தீமூட்டி அதைச் சுற்றிச் சுற்றி வந்து குதிப்பது அவர்கள் வழக்கம். பனி மலர் அழகியைக் குழந்தைகள் வலுக்கட்டாயமாகக் கூட்டிப் போக வந்து விட்டார்கள். மேரிக்குத் திக்கென்றது. ஆனால் தன் அருமை மகளை அவர்களுடன் அனுப்ப முடியாது என்று கூறுவதற்கான காரணம் ஏதுமில்லை அவளிடம். குளிர்ந்த மாலை வேளையாக இருந்ததனால் பனி மலர் அழகியும் அவர்களோடு செல்ல மறுக்கவில்லை.

''உங்கள் செல்லப் பெண்ணைப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்ப்பித்துவிடுகிறோம் பாட்டி!'' என்று கூவியபடியே அவள் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு ஓடினார்கள் குழந்தைகள்.

இருள் சூழ்ந்த கானகத்தில் வெட்டவெளியாக இருந்த ஒரு பகுதியில் சொக்கப்பனை கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. குழந்தைகள் காட்டு மலர்களால் தாங்களே தயாரித்த மாலைகளைத் தலையிலும் கழுத்திலும் அணிந்து கொண்டு அந்தத் தீயைச் சுற்றிக் கைகொட்டி ஆடினார்கள்.

''நாங்கள் செய்கிறபடியே நீயும் ஆடிப் பாடு!'' என்று கூறியபடி பனி மலர் அழகியை இழுத்து வந்த பெண்கள் குதித்துப் பாடியபடியே ஒவ்வொருவராக அந்தத் தீயின் மறுபக்கத்துக்குத் தாவினார்கள், புகையையும் தீ ஜ்வாலையையும் கிழித்துக் கொண்டு.

திடீரென்று ஓர் ஆழ்ந்த பெருமூச்சுக் கேட்டது. அதை அடுத்து ஒரு பயங்கரமான அமைதி. தீயின் மேலாக வெண் புகை ஒன்று மிதந்து மறைந்தது. அதே சமயம் பனி மலர் அழகியைத் தங்களிடையே காணாததைக் கண்ட குழந்தைகள் அதிர்ச்சியடைந்தனர்.

''என்னது? பனி மலர் அழகி எங்கே?'' குழந்தைகள் கத்தின. இங்கும் அங்கும் எங்கும் தேடித் தேடிப் பார்த்தன. ஆனால் அவளைக் காணவில்லை.

ஏழைத் தம்பதிகளின் வேண்டுதலால் தோன்றியவள், நெருப்பின் வெப்பமான மூச்சுக் காற்றிலே கரைந்து மறைந்துவிட்ட ரகசியம் யாருக்குத் தெரியப் போகிறது?

ஒவ்வோர் ஆண்டும் முதல் முதலாகப் பனித் தூள் பாலேடாக விழும்போது இவானும் மேரியும் ஜன்னலருகே அமர்ந்தபடி ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தங்கள் பனித் தூள் அழகி திரும்பவும் வரமாட்டாளா என்று. வருவாளா?


சரிக்கட்டிய
கிரிக்கெட்
ஒரு பரிசு!
*
கட்டுரை
எழுதுங்கள்
மட்டையை
வாங்குங்கள்!



அண்மையில் சென்னை எம். ஏ. சிதம்பரம் ஸ்டேடியத்தில் இந்தியாவுக்கும் வெஸ்ட் இண்டீஸுக்கும் இடையே நடந்த நாலாவது கிரிக்கெட் டெஸ்ட் ஒரு பெருந் திருவிழாவாகவே இருந்தது. பச்சைக் குழந்தை முதல் பல்லுப் போன தாத்தா வரை எவ்வித வேறுபாடும் இன்றி லட்சக் கணக்கில் குழுமியிருந்து ஒரே மாதிரி உற்சாகத்துடன் ஆட்டத் தினரை ஊக்கப்படுத்தி ஆட்டத்தை நடத்திக் கொடுத்தது கண்கொள்ளாக் காட்சிதான். பட்டாசு வெடித்தும் மைதானத்தில் பழங்களை உருட்டியும் ஊறு செய்த பண்பாளர்கள் சிலர் இருந்தபோதிலும் இப்பெரும் திருவிழா மிக நேர்த்தியாகவே இருந்தது.

முன்பின் தெரியாதவர்களுடன் சுற்றி யிருப்பவர் பார்த்துச் சிரிப்பதை மறந்து பெருஞ் சண்டை போட்டவர்கள் கூட ஆட்டம் தொடங்கியவுடன் எல்லாவற் றையும் மறந்து உறவு போல் ஒட்டிப் பழகியது நமது மண்ணின் தனிப் பண்பு!



முதல் இரண்டு டெஸ்டுகளை நேரில் பார்த்தவர்களும் அவை பற்றிப் பத் திரிகையில் படித்தவர்களும் ரேடி யோவில் காமெண்டரி கேட்டவர்களும் 'இனி கிரிக்கெட் சரித்திரத்தில் இந்தியா அரோகராதான்; எல்லாம் போச்சு' என்றும், 'பட்டௌடி தலைமை பைசாப் பெறாது' என்றும் சொல்லிக் கொண்டும் பொருமிக் கொண்டும் இருந்தபோது வெஸ்ட் இண்டீஸ் கோஷ்டியை வெற்றி கொண்டு, 'நாங்கள் எதற்கும் சளைத்த வர்கள் இல்லை' என்று நிரூபித்த நமது குழுவினருக்கும் சென்னை சிதம்பரம் ஸ்டேடியம் பிட்சுக்கும் நமது பாராட் டுக்களும், நன்றியும் உரியன. ஒவ்வொரு தரப்பும் இரண்டிரண்டு டெஸ்டுகளில் வெற்றி பெற்றுப் பலம் சரிக்கட்டி யிருப் பதால் பம்பாயில் கடைசி டெஸ்ட் நிச்சயமாக அதி - ரசம்தான்; சந்தேகமே இல்லை.



சென்னையில் நடந்த மட்டையடி மகோத்சவத்தைப் பற்றிக் கோகுலத்தில்

என்ன எழுதலாம் என யோசித்தோம். நாலாவது டெஸ்ட் பார்த்த லட்சோப லட்சம் ரசிகர்களில் நமது கோகுலம் வாசகர்களும் ஏராளமாக இருந்திருப் பார்கள். அவர்களையே ஒரு விமரிசனம் எழுதச் சொன்னால் என்ன என்று தோன்றியது.

எங்கே உங்கள் சாமர்த்தியத்தைக் காட்டிச் சென்னையில் நடந்த நாலாவது டெஸ்ட் மாட்ச் பற்றிக் கோகுலத்தில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் ஒரு சுவையான விமரிசனம் எழுதியனுப்







முதல் பக்கம்: சந்திரசேகர் வீசும் மந்திரப் பந்து. கேக்வாடின் 'ஏ' கிளாஸ் ஆட்டம்.

இரண்டாம் பக்கம்: காளிசரணின் கவர்ச்சியான ஆட்டம். லாயிடின் லாகவமான ஆட்டம்.

மூன்றாம் பக்கம்: என்ஜினீயரும், காளிசரணும். சாடிவிட்ட சிங்கம்போல் ஆடித் தீர்த்த பேடி. வெற்றிக்கு வழி செய்த விசுவநாத்.

கடைசிப் பக்கம்: பட்டௌடி வெற்றி உலா. 'போதும் பிரஸன்னு பௌலிங்; ஆட்டம் முடிஞ்சி போச்சு' என்கிறாரோ! மன்காட் எடுத்த மகத்தான விக்கெட்.







புங்கள் பார்க்கலாம். சிறந்த விமரிசனம் கோகுலத்தில் இடம் பெறுவதுடன் உங்களுக்கும் ஒரு பரிசை — **புதிய கிரிக்கெட் மட்டையும், பந்தும், விக்கெட் ஸ்டம்புகளும்** பெற்றுத் தரும்.

உறைமீது **கிரிக்கெட் விமரிசனம்** என்று எழுதி, **ஆசிரியர், கோகுலம் சென்னை 600031** என்று விலாசமிட்டு அனுப்பவும். மறக்காமல் உங்கள் வயது, படிக்கும் வகுப்பு, விலாசத்தையும் குறிப்பிட்டு, விமரிசனம் நமக்குக் கிடைக்க வேண்டிய கடைசித் தேதி 15–2–75. இது பற்றி வேறு கடிதப்போக்குவரத்து வைத்துக் கொள்வது இயலாது.

(டெஸ்ட் மாட்சை நேரில் பார்க்காதவர்கள் இங்குள்ள சில காட்சிகளைக் கண்டு மகிழலாமே!)







பாப்பா பாப்பா படம்பாரு
படத்தில் தாத்தாக் களைப்பாரு
புன்னகை தவழும் ஒளிமுகத்தில்
பண்பும் அன்பும் பொலியுதுபார்!

கடவுள் பக்தி கொண்டவராம்
கற்றுயர் பட்டம் பெற்றவராம்
தொழிலைத் துறந்து பொதுவாழ்வில்
இழிவைத் துடைக்கப் புகுந்தவராம்!

தெளிவு தூய்மை பூண்டவராம்
எளிமை உருவம் கொண்டவராம்
வளமை கொழிக்க தியாகமெனும்
வேள்வித் தீயில் வெந்தவராம்!

அடிமை விலங்கு அறுத்திடவே
அஹிம்சை சிறந்தது என்றூராம்
எழுத்தால் பேச்சால் நாட்டினரை
இருவரும் உசுப்பி எழுப்பினராம்!


இந்தியா விடுதலை தான்பெறவே
இன்னல் அலைகள் மோதிவர
சத்திய விரதங் கரங் கொண்டு
சிந்தை சிதையா மலைகொண்டு

சிறைவாழ்க் கைபல இடர்பாடும்
சஞ்சலம் யாவையும் வென்றவராம்
நேர்மை நீதி உண்மைவழி
நடந்தே நலன்கள் குவித்தவராம்!

நாளும் போற்றி அறவழியில்
கீதை கண்ணன் நெறிமுறையில்
ஓதும் மறைநூல் குறிக்கோளை
ஓர்ந்து செயலில் வடித்தவராம்!

ஞாலம் போற்றும் காந்திமகான்
ஞானத் தவமுனி இராஜாஜி
நம்மனக் கோவிலில் அணையாத
நந்தா விளக்கு ஒளிச்சுடராம்!


—கார்வண்ணன்



நந்தா விளக்கு



சீதையின் தலையை இந்திரஜித் வெட்டிப்போட, அதைக் கண்ட அனுமான் துடித்துப் போகிறார்.
அன்னை கொலையுண்ட பின் நாம் யுத்தம் செய்வானேன்? இக்கொடுமையை ஐயனிடம் சொல்லிக் கதறுவோம்.
குரங்குபுத்தி என்பது சரிதான். உண்மைச் சீதையை நான் இங்கு கொண்டு வரமுடியுமா? என் நிகும்பலை யாகத்துக்கு வானரங்களின் இடையூறு இல்லாதிருக்க நான் திட்டமிட்டபடி வெற்றி.
ஹ...ஹ...ஹா!
ஜெய் ஹனுமான் 30
கதை: ரா. கணபதி
சித்திரம்: வினு
மாருதி மூலம் செய்தி அறிந்த ராமலட்சுமணர் இடிந்து போனார்கள். அப்போது அங்கு விபீஷணர் வருகிறார்.
கோசலை குமாரா! இந்திரஜித் கொன்றது மாயா சீதை. உமது பத்தினி பத்திரமாக இருக்கிறாள். நிகும்பலை யாகம் முடிக்க மேகநாதன் ஆடிய நாடகம் இது.
அந்த யாகம் முற்றுப்பெற்றால் அவனை வெற்றி கொள்ள யாராலும் முடியாது. அது முடிவு பெறாவிடில் அவன் உயிருக்கே அது முடிவைக் கொடுக்கும். ஆகவே நாம் விரைந்து செயல்பட்டு அந்த யாகத்தை அவன் முடிக்க முடியாமல் செய்யவேண்டும்.
அனுமானும் லட்சுமணனும் வானரங்களுடன் யாகசாலையை அழிக்க, வெகுண்ட இந்திரஜித் யுத்தத்துக்கு மறுபடி வருகிறான்.


லட்சுமண! உன்னை யமனுலகுக்கு அனுப்பாமல், வீடு திரும்ப மாட்டேன்.
நீ உயிரோடு வீடு திரும்பப் போவதில்லை.
இந்திரனுக்கு உரிய விசேஷ பாணத்தின் மூலம் இந்திரனை வென்ற இந்திரஜித்தின் தலையைத் துண்டித்து விடுகிறார் லட்சுமணர்.
மாண்டாயோ என் மைந்தா? தந்தையின் கௌரவம் காக்க களத்தில் வீழ்ந்து பட்டாயோ மகனே....
இந்திரனையே வென்ற உனக்குமா இந்த நிலை? ஐயோ! அருமைக் குமாரா....
நான் நினைத்தது போல அந்த நரர்களை இலகுவாக வெல்ல முடியாது போலிருக்கிறது.
மாயா ஜாலங்களினாலே தான் அவர்களை மாய்த்தாக வேண்டும்.
உண்மைதான். பாதாள உலகிலே இருக்கும் என் தோழர்களான அகிராவணனையும்! மயிராவணனையும்! அழைக்கிறேன். மாயத்திலே வல்லவர்கள் இவ்விருவரும்.
தொடரும்
அடுத்த இதழிலிருந்து மயில் ராவணன் கதை ..ஆரம்பம்..

வீரத்தின் கருணை

— ரேவதி

இரண்டு நாட்களுக்குப் பிறகு அந்தச் சந்நியாசிக்கு அப்பொழுதுதான் நினைவு திரும்பி யிருந்தது. அருகே விளையாடிக் கொண்டிருந்த விட்டல் அவர் கண் விழித்ததைக் கண்டதும், ''எல்லோரும் ஓடி வாங்க, சுவாமிஜி கண் திறந்து பார்க்கிறார்'' என்று மகிழ்ச்சியோடு கத்தினான்.

விட்டல் போட்ட சத்தத்தைக் கேட்டுப் பூஜைக்குச் சந்தனம் அரைத்துக் கொண்டிருந்த தேவாஜி ஓடிவந்தார். அவர்தான் விட்டலின் தந்தை. பூஜைக்கு நைவேத்தியம் தயாரித்துக் கொண்டிருந்த கோதுபாய் ஓடி வந்தாள். அவள்தான் விட்டலின் தாய். பூஜைப் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருந்த பாட்டியும், மாலை தொடுத்துக் கொண்டிருந்த தாத்தாவும்கூட அவளோடு ஓடிவந்தனர்.

''உடம்பு எப்படி இருக்கிறது, சுவாமிஜி?'' என்று அன்போடு கேட்ட தேவாஜி, சந்நியாசியின் கையைத் தூக்கி நாடி பிடித்துப் பார்த்தார்.

''காய்ச்சல் முழுக்க விட்டு விட்டது. இப்பொழுது ஒன்றுமில்லை'' என்று கம்பீரமாகப் பதில் அளித்த சந்நியாசி ''ஆமாம் ஐயா! நான் உங்களுக்கெல்லாம் சுமையாக எத்தனை நாட்களாகத் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறேன்? என்னோடு வந்த மற்ற சந்நியாசிகள் எல்லாம் எங்கே?'' என்று கேட்டார்.

''நீங்கள் இங்கே வந்து இரண்டு நாட்கள் ஆகின்றன சுவாமிஜி. அவ்வளவுதான். உங்களை உபசரிக்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறதே என்று நாங்கள் மகிழ்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் சுமை என்று நினைக்கிறீர்களே! இங்கே வரும்போது உங்களுக்குக் கடுமையான காய்ச்சல். உங்களை அழைத்து வந்த இன்னொரு சுவாமிஜி தாங்கள் திரும்பி வரும்வரை உங்களைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளும்படி என்னிடம் ஒப்படைத்து விட்டுப் போனார். அவர்கள் எல்லாம் ராமபிரான் வசித்த பஞ்சவடிக்குப் போகிறார்களாம். திரும்பி வரும்போது உங்களை அழைத்துப் போவதாகக் கூறினார்கள்'' என்றார் தேவாஜி.

''அப்படியானால் பல நாட்களாகுமே? அதுவரை உங்களுக்குச் சுமையாகவா இருப்பது? என்னால் முடியாது. நானும் விரைந்து போய்ப் பஞ்சவடியில் அவர்களோடு சேர்ந்து கொள்ளுகிறேன். எனக்கு உடம்புக்கு ஒன்றுமே இல்லை. நான் குணமாகி விட்டேன்'' என்று எழுந்தார் சந்நியாசி.

அவரது மனத்துக்கு இருந்த வலிமை அவரது உடலுக்கு இல்லை. இரண்டு நாட்கள் கடுமையான காய்ச்சலில் தன் உடல் பலவீனமடைந்துள்ளது என்பது அவருக்குத் தெரியவில்லை. எழுந்த வேகத்தில் அப்படியே அவர் சாய்ந்து விட்டார்.

''சுவாமிஜி! காய்ச்சல் விட்டு விட்டாலும் அதனால் ஏற்பட்டுள்ள பலவீனம் இன்னும் உங்களுக்கு இருக்கிறது. சில நாட்கள்வரை எங்களுடன் இருந்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். பஞ்சவடிக்குப் பயணம் போகும் அளவுக்கு உங்களுடைய உடல்நிலை குணமாகவில்லை'' என்றார் தேவாஜி. பாவம் சந்நியாசி! அதற்கு மேல் பேசாது கண்களை மூடிக் கொண்டு படுத்து விட்டார்!

''தேவாஜி'' என்று மகனை அழைத்த தாத்தா சந்நியாசிக்குக் காதில் விழாத மெல்லிய குரலில் ''மகனே! சுவாமிஜி சாப்பிட்டு இரண்டு நாளாகிறது. இப்பொழுது காய்ச்சல் விட்டிருப்பதால் அவருக்குக் கடுமையாகப் பசிக்கும். குடிப்பதற்குச் சூடான பால்



கொடுத்தால் அவருக்குத் தெம்பாக இருக்கும்'' என்று கூறினார்.

''எனக்குக் கூடத் தோன்றியது அப்பா. பால்தான் நல்லது. ஆனால் பாலுக்கு இப்போது எங்கே போவது? தேவி பூஜைக்காகப் பேஷ்வா வீட்டில் ஒரு கிண்ணம் பால் காலையில் கொடுத்தார்கள். பூஜை முடிந்த பிறகு அதை உங்களுக்குத்தானே கொடுத்தேன்?'' என்று மெல்லிய குரலில் கேட்டார், தேவாஜி.

''நானும் அதை உடனே குடிக்கவில்லை தேவாஜி. ஒருவேளை சுவாமிஜி எழுந்தால் கொடுக்கலாமே என்று வெகு நேரம் வைத்திருந்தேன். விட்டல் வந்து பசிக்கிறது தாத்தா என்றான். பாவம், நேற்று இரவுகூட அவனுக்குச் சாப்பாடு இல்லை. அதனால் அவனுக்குக் கொடுத்துக் குடிக்கச் சொன்னேன்'' என்றார் தாத்தா.

தந்தையும் தாத்தாவும் பேசிக்கொள்வதைக் கேட்டுக் கொண்டே வந்த விட்டல், ''நானும் அதைக் குடிக்கவில்லை அப்பா. ஒருவேளை சாப்பிடாத எனக்கே இப்படிப் பசிக்கும்போது இரண்டு நாட்களாகச் சாப்பாடு இல்லாது கிடக்கும் சுவாமிஜிக்கு எப்படிப் பசிக்கும் என்று எண்ணிப் பார்த்தேன். அவர் எழுந்திருக்கும்போது நம்முடைய வீட்டில் அவருக்குக் கொடுக்க ஏதாவது இருக்குமோ இருக்காதோ என்று தோன்றியது. அதனால் பாலை நான் குடிக்கவில்லை. பத்திரமாக மூடிவைத்திருக்கிறேன்'' என்று உள்ளே சென்று பாலை எடுத்து வந்து தந்தையிடம் கொடுத்தான்.

மகனை அணைத்துக்கொண்டு கண்ணீர் விட்ட தேவாஜி, பாலை எடுத்துக் கொண்டு சந்நியாசியிடம் வந்தார். கொடுத்து அருந்தும்படி வேண்டிக் கொண்டார். என்ன காரணமோ தெரியவில்லை. சந்நியாசியின் கண்கள் கலங்கியிருந்தன. பாலை வாங்கிக் கொண்டு, ''ஐயா, உங்கள் வீட்டில் இன்றைக்கு என்ன விசேஷம்? ஏதோ பூஜை நடக்கப் போகிறது போலிருக்கிறதே?'' என்று கேட்டார்.

'' ஆமாம், சுவாமி! ஆக்ராவில் பாதுஷா அவுரங்க சீப்பிடம் சிறைப் பட்டிருக்கும் சிவாஜி மன்னர் மிகவும் உடல் நலம் குன்றிப் படுத்த படுக்கையாகக் கிடக்கிறார் என்று பேசிக்கொள்கிறார்கள். சிவாஜி மன்னர் விரைவில் குணமாகி, பாதுஷாவின் சிறையிலிருந்து தப்பி வர வேண்டும் என்பதற்காகத் தேவிக்கு இன்று விசேஷ பூஜை நடத்த இருக்கிறோம்'' என்றார் தேவாஜி.





''சிவாஜி மன்னரா? யார் அவர்? உங்களுக்கு அவர் என்னவாக வேண்டும்?'' என்று சந்நியாசி அமைதியாகக் கேட்டது எல்லோரையுமே திகைக்க வைத்தது. அவர்களுடைய திகைப்பை உணர்ந்து கொண்ட சந்நியாசி ''பல காலம் பிரயாகையில் நான் தவத்தில் இருந்து விட்டதால் எனக்கு எதுவும் தெரியாது'' என்று கூறினார்.

''சுவாமிஜி! இந்துவாக உள்ள ஒவ்வொருவரும் சிவாஜி மன்னரைப் பற்றிக் கண்டிப்பாக அறிந்து கொள்ள வேண்டும். இந்த இந்துஸ்தானத்தில் இன்று இஸ்லாமியர் ஆட்சிதான் நடக்கிறது. இந்த ஆட்சியில் ஒருவன் இந்துவாக வாழவேண்டும் என்றால் அதற்காகத் தனியாக வரி கட்டியாக வேண்டும். புண்ணிய தலங்களுக்கு யாத்திரை போக வேண்டும் என்றால் அதற்கும் தனியாக வரி செலுத்தியாக வேண்டும். இந்த அநீதியைக் கேட்கக்கூடத் துணிவில்லாது இந்துக்களாகிய நாம் கோழைகளாக இஸ்லாமியர்களுக்கு அடிமைகளாக வாழ்ந்து வருகிறோம். இந்த நிலையில் பதினாறு வயதுகூட நிரம்பாத சிவாஜி தமது வலிமையை மட்டுமே நம்பி இஸ்லாமியர் ஆட்சிக்கு எதிராக ஓர் இந்து அரசை அமைக்கத் துணிந்தது சாதாரணச் செயலா? பதினாறு வயதில் போர்க்கொடி உயர்த்திய அவர், கடந்த இருபது ஆண்டுகளாகப் பிடித்த கோட்டைகளையும், போரில் வெற்றி கொண்ட தளபதிகளையும் சிதற அடித்த பகைவர் சேனைகளையும் கவனிக்கும்போது அவர் நம்மைப் போல் சாதாரண மனிதர்தானா என்ற சந்தேகம் கூட உண்டாகிறது'' என்று நிறுத்தினார் தேவாஜி.

இந்துவாக இருந்தாலும் மற்ற மதங்களையும் மதிக்கத் தெரிந்தவரே அவர் என்பதை எண்ணி இந்துக்களாகிய நாம் பெருமை கொள்ளவேண்டும். பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் பிற மதத்தினரின் ஆலயங்களுக்கும் அவர் பாதுகாப்புக் கொடுத்து நடத்துகின்ற போர்களைக் கவனிக்கும் போது பாரத ராமாயண காலத்துத் தர்ம யுத்தங்களைப் பற்றிய நினைப்புத் தான் நமக்கு வருகிறது. இவர் எப்பொழுது முடி சூடி மாமன்னராகப் போகிறார் என்று ஒவ்வொரு இந்துவும் ஆவலோடு ஏங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் சிவாஜி மன்னரைப் பாதுஷா அவுரங்கசீப் தந்திரமாக ஆக்ராவுக்கு அழைத்துச் சிறைப்படுத்தி விட்டாரே? வெண்ணெய் திரளும்போது பானை உடைந்த கதையாகி விடக் கூடாதே என்று நாங்கள் எல்லாம் கலங்கிக் கொண்டிருக்கிறோம் சுவாமிஜி!'' என்றார் தாத்தா.

''சுவாமிஜி, உங்களுக்கு யார் ஆண்டாலும் கவலை இல்லை. ஆனால் எங்களால் அப்படி இருக்க முடியவில்லையே! சிவாஜி மன்னருக்கு ஒன்றும் ஆகிவிடக் கூடாது என்று தேவியை வேண்டிக் கொள்வதைத் தவிர எங்களால் வேறு என்ன செய்ய முடியும்?'' என்று கேட்ட தேவாஜி, ''உங்களைப் போன்ற மகான்கள் அவருடைய நலனுக்காக வேண்டிக் கொண்டால், கண்டிப்பாகப் பலன் இருக்கும். செய்வீர்களா சுவாமிஜி?'' என்று ஆவலோடு கேட்டார்.

''உங்களுடைய வேண்டுகோளுக்குத் தேவி மனமிரங்குவாள் ஐயா. இருந்தாலும் உங்கள்விருப்பத்தின்படி நானும் இந்தப் பூஜையில் கலந்து கொள்ளுகிறேன்'' என்று எழுந்தார் சந்நியாசி.

நான்கு நாட்கள் ஓடின. சந்நியாசியின் உடல்நிலை மேலும் குணமாகியது.



தனக்கு வேண்டியவற்றைக் கவனித்துச் செய்வதற்காகத் தேவாஜி எவ்வளவு துன்பப்படுகிறார் என்பதை சந்நியாசி கண்ணால் கண்டு உருகினார். தேவாஜிக்குத் தனியான தொழிலோ வருமானமோ கிடையாது. தெய்வத்தின் பெருமைகளை விளக்கும் பாட்டுக்களைத் தெருத் தெருவாகச் சென்று பாடி உஞ்சவிருத்தி செய்து வந்தார். அதில் கிடைக்கும் நவதானியங்களை மாவாக்கிக் கஞ்சி வைத்துத் தேவிக்குப் படைத்துவிட்டு வயதான தாய்க்கும் தந்தைக்கும் மகன் விட்டலுக்கும் கொடுப்பார். மீதி இருந்தால் மனைவியும் தானும் சமமாகப் பகிர்ந்து கொள்வார்கள். இல்லாவிட்டால் வெறும் தண்ணீர் தான். பெரும்பாலான நாட்கள் தண்ணீர்தான் அவருக்குக் கிடைக்கும். இந்த அழகில் சந்நியாசி வேறு விருந்தாளியாக வந்து விட்டாரே என்று அவர் முகத்தைச் சுளிக்கவில்லை. அவர் அப்படி இருந்தது கூட அதிசயமில்லை. அவருடைய மகன் சிறுவன் விட்டல்கூட அவரைப் போலவே வந்திருக்கும் விருந்தாளிக்கு இல்லாது போய்விடுமே என்பதற்காகத் தனக்குப் பசிக்கவில்லை என்று கூறி இரகசியமாகப் பட்டினி கிடந்ததுதான் சந்நியாசியின் மனத்தை உருக்கியது.

அன்று மாலை சந்நியாசி விட்டலை அழைத்தார். அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது என்பதை அறிந்து கொண்டபோது விட்டலுக்கு அதிசயமாக இருந்தது. அவர் கூறியபடி அவன் ஒரு கடிதம் எழுதிக் கொடுத்தான். தேவாஜியை அழைத்த சந்நியாசி கடிதத்தை அவரிடம் கொடுத்து ''இதை நகர் கொத்தவாலிடம் (நகர அதிகாரி) கொண்டு போய்க் கொடுங்கள். நானும் அவரும் நெருங்கிய நண்பர்கள். அவர் உங்களுக்கு ஐந்நூறு மொகரா பொன் காசு கொடுப்பார். என்னைக் காண ஓடி வருவார்'' என்றார்.

''சுவாமிஜி...! எனக்கு எதற்குப் பணம்? இங்கே உங்களுக்கு ஏதாவது குறை வைத்து விட்டேனா?'' என்று பதைத்தார் தேவாஜி.

''அதெல்லாம் இல்லை ஐயா. இந்த அளவுக்கு உண்மையோடு உங்களைத் தவிர வேறு யாராலும் கவனிக்க முடியாது.''

''பின் எதற்காக எனக்குப் பணம்? இருப்பதைக் கொண்டு, கிடைப்பதைக் கொண்டு நான் மன அமைதியுடன் வாழ்கிறேன். தேவைகளை அதிகமாக்கிக்கொண்டு அவற்றை ஈடுகட்ட நியாயம் இல்லாத வழிகளில் முயன்று பணம் சேர்ப்பதை நான் விரும்பவில்லை. சுவாமிஜி, என்னை விட்டு விடுங்கள்.''

''ஐயா! .பணம் உங்களுக்குத் தேவைப்படா விட்டாலும் என்னைப் போன்ற விருந்தினர்கள் வந்தால் இன்னும் நன்றாக உபசரிக்கப் பயன்படுமல்லவா! போய் வாங்கிக்கொண்டு வாருங்கள் ஐயா!'' என்று கட்டாயப் படுத்தித் தேவாஜியை அனுப்பி வைத்தார் சந்நியாசி.

கொத்தவால் கடிதத்தைப் படித்ததும் வியந்து போனார். ஐந்நூறு பொன் காசுகளைத் தேவாஜியிடம் கொடுத்து விட்டுக் காவலாளிகளுடன் அவசரம் அவசரமாகக் கிளம்பி வந்து சந்நியாசியைக் கைது செய்தார்!

'' ஐயா !'' என்று திகைத்துப் போயிருந்த தேவாஜியை அழைத்த சந்நியாசி, ''உங்களுடைய உண்மையான பூஜையைத் தேவி ஏற்றுக் கொண்டு அதற்கு முன்பே என்னை அவுரங்கசீப்பின் சிறையிலிருந்து தப்பு

விக்க வைத்து விட்டான்'' என்று சிரித்தார்.

தேவாஜி மனம் நடுங்கினார். ''சுவாமிஜி! உண்மையில் சிவாஜி மன்னரா தாங்கள்! என்னுடைய வறுமையைப் போக்குவதற்காக என்னை விட்டே உங்களைப் பிடித்துக் கொடுக்கும்படி செய்து விட்டீர்களே? கண்ணிரண்டையும் விற்று யாராவது சித்திரம் வாங்குவார்களா? ஐயோ! மாவீராகிய நீங்கள் மீண்டும் சிறைப்பட நான் காரணமாகி விட்டேனே!'' என்று கதறினார்.

''தேவாஜி! நான் வீரனென்றால் நீங்களும் வீரர்தான். என்னுடைய உடல் வீரத்துக்கு உங்களுடைய உள்ளத்தின் வீரம் எந்த வகையிலும் குறைந்ததல்ல. என்னைப் போல் வீரனாவது எளிது. ஆனால் உங்களைப் போல் வீரனாவது எளிதல்ல. செல்வந்தன் கொடை வள்ளலாவது பெரிய செயலல்ல. ஆனால் உங்களைப் போல் அரைப் பட்டினி கிடப்பவர்கள் தனக்கென்று எதையும் வைத்துக் கொள்ளாது பிறருக்குக் கொடுத்து மகிழ்வது சாதாரணச் செயலுமல்ல. இந்துக்களின் வீரம் இன்னும் உறங்கவில்லை என்பதற்கு நான் எடுத்துக்காட்டு என்றால், தனக்கென்று வாழ்வதை ஏற்காத இந்து தர்மமும் இன்னும் மங்கிப் போகவில்லை என்பதற்கு நீங்களும் உங்கள் குடும்பமும் எடுத்துக்காட்டு. உங்களைப் போன்றவர்களை யெல்லாம் வறுமையில் போராட விட்டு விட்டு நான் இந்து சாம்ராஜ்யம் அமைப்பதைத் தேவி விரும்ப மாட்டாள். அழாதீர்கள் தேவாஜி. எனக்காக இல்லாவிட்டாலும் உங்களைப் போன்ற நல்லவர்கள் ஏங்குகிறார்கள் என்பதற்காகவாவது நீங்கள் வணங்கும் தேவி என்னைப் பாதுகாப்பாள். நம்பிக்கையோடு இருங்கள். எனக்கு எதுவும் நேர்ந்து விடாது'' என்று தேவாஜியின் கண்ணீரைத் துடைத்த சிவாஜி மகிழ்ச்சியோடு சிரித்துக் கொண்டே விடைபெற்றுக் கொண்டார்.

தெய்வத்திடமும், தன் திறமையிலும் சிவாஜி வைத்திருந்த நம்பிக்கை வீண் போகவில்லை. போகின்ற வழியிலேயே தேவியின் அருளால் தன் நண்பர்களின் உதவியைக் கொண்டே சிவாஜி மீண்டும் தப்பிப் பூனாவுக்குச் சென்றார். முடி சூட்டிக் கொண்டு இந்துக்கள் கனவு கண்ட இந்து ராஜ்யத்தை உருவாக்கி அவர்களைப் பெருமையோடு தலை நிமிர்ந்து நிற்க வைத்தார்.


உயர்ந்த பரிசு

ஆர். ரங்கராஜன்

ராமு ஒரு மிராசுதாரின் பிள்ளை. அவன் 'பாபி' தன் என்ற நாயை மிகவும் பிரியமாக வளர்த்து வந்தான். அற்புதமான அழகு என்றில்லாவிட்டாலும் அதீதமான ஒரு கம்பீரம் அந்த நாயிடம் இருந்தது. ராமு எங்கு சென்றாலும் அது கூடவே வரும். பச்சைப் பசேல் என்றிருக்கும் வயல்களில் வரப்பில், அவன் பூண்டி மாதா கோயிலை ஒட்டியுள்ள கான்வெண்டில் படிக்கச் செல்லும்போது பாபி துணைக்கு வரும். பகல் உணவையும். அதுவே தூக்குப் பாத்திரத்தில் கொண்டு போய்க் கொடுத்துவிடும். ராமு தன் உயிருக்கு உயிராக அதை நேசித்து வந்தான். வேணுகோபாலசுவாமி கோயிலுக்குப் பின்னால் உள்ள தெருவின் வழியாக ஒரு பர்லாங் தூரத்தில் உள்ள காவேரியாற்றுக்கு அவன் குளிக்கச் சென்றால் கூடவே பாபி சோப், துணி எல்லாவற்றையும் எடுத்துச் செல்லும். அத்தனை சமர்த்து.

ஒரு நாள் ராமு ஆற்றில் குளிக்கச் சென்றான். எதிரில் மோகன் வந்து கொண்டிருந்தான். மோகனும் ஒரு மிராசுதாரின் பிள்ளை. எதிலும் ராமுவுக்குப் போட்டி. அவன் டாலி என்ற நாயை வளர்த்தான். டாலி உயர்ந்த இனத்தைச் சேர்ந்த நாய். பார்ப்பவர்களுக்குத் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சலாம் போல் தோன்றும். அத்தனை அழகு. என்றாலும் பாபி அளவுக்குச் சமர்த்தில்லை. அதை வெகு அக்கறையாக மோகன் கவனித்து வளர்த்தான். காரணம் அடுத்த வாரம் 'நாய்களுக்கான அழகுப் போட்டி' ஒன்று திருச்சியில் நடைபெறவிருந்தது. ராமுவிடம் இதைத் தெரிவித்தான். எந்த வகையிலாவது பாபியை மட்டந் தட்டுவது என்று காத்துக் கொண்டிருந்தான் மோகன். போட்டியில் பாபி பரிசு பெறாது என்று உறுதியாக நம்பினான். இருந்தாலும் பலர் முன்னிலையில் ராமுவைக் கேலிக்கு ஆளாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் ராமுவைப் போட்டியில் பங்கு பெறும்படி தூண்டினான். அப்பாவி ராமுவும் சம்மதித்தான்.

போட்டி நாளும் வந்தது. மோகனின் டாலிதான் முதல் பரிசைத் தட்டிச் சென்றது. பாபிக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. ராமுவுக்கு வருத்தம்தான்.



மோகனுக்கோ ஒரே குஷி. தன் நாய்க்குப் பரிசு கிடைத்த மகிழ்ச்சியில் ராமுவை மட்டம் தட்டியே பேச ஆரம்பித்தான். ராமுவும் முன் போல் நாயுடன் உற்சாகமாக வெளியில் உலாவ வருவதில்லை என்றாலும் தன் நாயிடம் முன் போலவே பிரியமாக இருந்து வந்தான்.

ஒரு நாள் படப் பிடிப்புக் குழு ஒன்று அந்த ஊருக்கு விஜயம் செய்தது. பூண்டி மாதா கோயிலில் ஷூட்டிங்கை முடித்துவிட்டுக் காவிரியாற்றில் ஒரு நடிகை நீந்தும் காட்சியைப் படம் எடுக்க வந்தார்கள். ராமுவும் ஷூட்டிங் பார்க்கச் சென்றிருந்தான். மோகனும் டாலியுடன் வந்திருந்தான். ஷூட்டிங் பார்க்கும் மகிழ்ச்சியில் மோகன் நீரில் இறங்கிவிட்டான். டாலி கரையிலே இருந்தது. திடீரென்று ஆற்றில் நீர்ப் பெருக்கெடுத்தது. மோகன் நீரில் அடித்துச் செல்லப்பட்டான். எதிர்பாராத இந்தச் சம்பவத்தால் மக்கள் கூச்சலிட்டனர். நடிகை இன்னொரு பக்கம் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்தாள். காமிரா சுழல்வதையும் மறந்து படப் பிடிப்புக் குழுவினர் தத்தளித்தனர். ஒருவருக்காவது நீரில் இறங்கத் துணிவில்லை. ஆபத்து சமயத்தில் என்னென்னவோ சமயோசித புத்திகள் தோன்றுமாமே! பாபிக்கும் அப்படி ஏதோ தோன்றியது போலும். ஒரு வேகத்தில் நீரில் பாய்ந்தது. ஆற்றுடன் போய்க் கொண்டிருந்த மோகனை நெருங்கியது. தாவி அவன் காலரைப் பிடித்து கரை வந்து சேர்ந்ததுமே மீண்டும் நீருக்குள் பாய்ந்து உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த நடிகையின் கூந்தலை வாயில் கவ்வி அவளையும் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தது. இருவரைக் காப்பாற்றிய அலுப்பில் அது மயங்கி விழுந்தது. உடனே எல்லோரும் தவிப்புடன் அதற்கு முதலுதவி செய்து அதன் மயக்கத்தைத் தெளிவித்தார்கள். எல்லாரும் பாபியைப் பிரமாதமாகப் புகழ்ந்தார்கள். நாய் இருவரைக் காப்பாற்றியதைக் காமிரா படம் வேறு எடுத்துவிட்டது. இது பாபிக்குப் பெரிய விளம்பரமாகப் போய்விட்டது. பத்திரிகையாளர்கள் அதன் தீரச் செயலைப் படத்துடன் வெளியிட்டார்கள். அதன் சாகஸச் செயலுக்காக அரசாங்கம் பரிசளித்துக் கௌரவித்தது.

மோகனும் மனம் திருந்தி தன் உயிரைக் காப்பாற்றிய பாபியைக் கொஞ்சத் தொடங்கினான்.

தெரியுமா ?

1607. ஒரு பிரிட்டிஷ் பிரதமர் நோபல் பரிசு பெற்றவர் — இலக்கியத் துக்காக - அவர் யார் தெரியுமா ?

1608. டாக்டர் ஷிவாகோ என்ற நூலின் ஆசிரியர் யார்?

1609. பன்னிரண்டாவது இரவு—டுவெல்ஃத் நைட் (Twelfth Night) என்ற ஷேக்ஸ்பியரின் நாடகத்துக்கு வேறொரு பெயரும் உண்டு. அது தெரியுமா ?

1610. ஆஸ்திரேலியாவில் வாழும் ஒரு வகைக் காட்டு நாய்க்கு டிங்கிள் என்று பெயராம். உண்மையா ?

1611. மெஸபொடேமியாவில் இருந்த புராதனமான சாம்ராஜ்யத்தின் பெயர் என்ன?

1612. சிலாஸ் மார்னர் என்ற புகழ் பெற்ற கருமியின் கதையை எழுதியவர் யார் ?



1613. இங்குள்ள பெண்வாசிக்கும் வாத்தியத்தின் பெயர் தெரியுமா ?

1614. மத்திய இத்தாலியில் ஓடும் புகழ்பெற்ற நதியின் பெயர் என்ன?

1615. எட்னு என்பது மெக்ஸிகோவில் உள்ள புகழ்பெற்ற எரிமலை. சரியா? தவறு ?

1616. ஷார்ட்சைட் — கிட்டப் பார்வை உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட வைத்தியச் சொல்லினால் குறிப்பிடப் படுவார்கள். அது தெரியுமா ?

1617. மிக உயர்ந்த ராணுவ கௌரவமாக இரும்பினாலான சிலுவையை ஒரு நாட்டில் அணிவிக்கிறார்கள் வீரர்களுக்கு. அது எந்த நாடு ?

1618. ஐக்கிய அமெரிக்காவில் கோனே தீவு (Coney Island) எங்கு உள்ளது ?

1619. 'பார்த்திபன் கனவு' என்ற புகழ் பெற்ற புதினத்தை எழுதியவரின் பெயர் என்ன?

1620. உலகிலேயே யாரும் இது வரை ஏறாத மிக உயரமான மலை எங்குள்ளது ?

1621. உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கும் தோட்டங்கள் ஆசியாவின் புகழ்பெற்ற ஒரு புராதன நகரத்தில் இருந்தது. அதன் பெயர் என்ன?

1622. ஐரோப்பாவின் வடக்குக் கோடி என்று எந்த இடத்தைக் கூறுகிறார்கள் தெரியுமா ?

1623. ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய நாடுகளை 1918 வரை அரசாண்ட குடும்பத்தினர் யார் தெரியுமா ?

1624. வட அமெரிக்கச் செவ்விந்தியர் அணியும் காலணிகளின் பெயர் தெரியுமா ?

1625. விண்வெளியில் முதன் முதலில் உலகைச் சுற்றி வட்டமிட்ட அமெரிக்கரின் பெயர் என்ன?

1626. இஸ்தான்புல் நகரில் உள்ள புகழ்பெற்ற பொருட்காட்சிச் சாலை ஒரு காலத்தில் அந்நாட்டு சுல்தானின் அரண்மனையாக இருந்தது. அந்த மியூசியத்தின் பெயர் என்ன?

1627. அஸன்ஷன் தீவு (**Ascension Island**) எங்குள்ளது?

1628. எடாம் என்ற பாலடைக் கட்டிகள் எந்த நாட்டிலிருந்து வருகின்றன ?

1629. குவெய்த் என்ற இடத்தில் கிடைக்கும் இயற்கை வளம் என்ன?

1630. தென் அமெரிக்காவில் — டிட்டிகாகா என்ற புகழ்பெற்ற ஏரி எந்த நாட்டில் உள்ளது ?

தெரியுமே !

விடைகள்: 1607. ஸர் வின்ஸ்டன் சர்ச்சில். 1608. அலெக்ஸாண்டர் சோல்ஷெனிட்ஸின் - நோபல் பரிசு பெற்றவர். 1609 'வாட் யூ வில்' (What you will) என்று 1610. தவறு. டிங்கோ (Dingo) என்பது அதன் பெயர். 1611. பாபிலோனிய சாம்ராஜ்யம். 1612. ஜார்ஜ் எலியட். 1613. மாண்டோலின் (**Mandoline**) 1614. டைபர் (**Tiber**) நதி 1615. தவறு. ஸிஸிலித் தீவின் கிழக்குக் கடற்கரை அருகே உள்ள எரிமலை எட்னு. 1616. மையோபியா (**Myopia**) என்று. 1617. அயர்ன் க்ராஸ் - ஜெர்மனியில். 1618. நியூயார்க்கில். 1619. பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி. 1620. காரகோரம் மலைத் தொடரில் உள்ள காஷர்ப்புரம் என்ற மலையுச்சி. 1621. பாபிலோன் நகரத்தில். 1622. வடக்கு நார்வேயிலுள்ள மாகரோ தீவை (**Magero Island**) 1623. ஹாப்ஸ்பரோ (**Hapsburg**) குடும்பத்தினர். 1624. மோகாஸின் (**Moccasin**) 1625. ஜான் க்ளன் (**John Glenn**) 1626. டாப்காபி (**Topkapi**) 1627. தென் அட்லாண்டிக் கடலில். 1628. நெதர்லாந்திலிருந்து. 1629. பெட்ரோல் என்ற எண்ணெய். 1630. பெருநாட்டில்.

கருணைக்குப் பரிசு

குமரன் அவன் தாய்க்கு ஒரே மகன். அவன் நல்ல புத்திசாலி. அதோடு அன்பும் கருணை உள்ளமும் கொண்டவனாகவும் இருந்தான். அவன் நான்காவது வகுப்புப் படித்து வந்தான். அவன் பள்ளிக்குப் போகும் பாதை போக்குவரத்து நெரிசல் மிகுந்ததாக இருந்தமையால் அவனை அவன் தாயாவது அல்லது வேலைக்காரியாவது பள்ளிக்கு அழைத்துச் சென்று விட்டுக் கூட்டி வருவது வழக்கம்.

அன்று குமரனுக்குப் பிறந்த நாள். அவன் தந்தை அவனுக்கு அழகான ஆடைகள் வாங்கித் தந்திருந்தார். அம்மாவோ வகை வகையான தித்திப்புக்களுடன் நல்ல விருந்து தயாரித்திருந்தாள். குமரன் மகிழ்ச்சிக்குக் கேட்கவா வேண்டும்? சாப்பாட்டுக்குப் பிறகு அழகாகத் தன்னை அலங்கரித்துக்கொண்டு பள்ளிக்குப் போகத் தயாராகிக்கொண்டிருந்தான். அப்பொழுது குமரனின் தாய், அவனிடம், ''குமரா! இன்று நானே உன்னைப் பள்ளிக்கு அழைத்துச் செல்கிறேன். வேலைக்காரி தனத்திற்கு ஏக வேலை. அதோடு போகிற வழியில் உன் அத்தை வீட்டுக்கும் சென்று அவரிடம் உன் பிறந்த நாள் பட்சணங்களையும் கொடுத்துவிட்டு வந்த மாதிரி இருக்கும்'' என்று சொன்னாள்.

பிறகு சற்று நேரத்துக்கெல்லாம் குமரன் அவன் தாயுடன் பள்ளிக்குப் புறப்பட்டான். வழியில் அத்தை வீடு வந்ததும் குமரனின் தாய் ''குமரா! நீயும் வாயேன். அத்தையை நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளலாம்'' என்றாள்.

குமரன், ''அம்மா! ஏற்கனவே நிறையப் பொழுதாகி விட்டது. அத்தையை நமஸ்கரிப்பது என்றால் என் காலணிகள், காலுறைகள் எல்லாவற்றையும் கழற்றி, மறுபடியும் போட்டுக்கொண்டு... அப்பப்பா...! அம்மா, நான் பிறகு சாவகாசமாக வந்து பார்த்துக் கொள்கிறேன்'' என்றான்.

''அப்படியென்றால் சரி, குமரா! இந்தா, பிடி உன் டிபன் பாத்திரத்தையும் பையையும். நீ மெதுவாகப் போய்க் கொண்டிரு. நான் நொடியில் வந்து விடுகிறேன்'' என்று சொல்லி அத்தை வீட்டில் நுழைந்தாள். குமரனும் மெதுவாக நடந்து போய்க் கொண்டிருந்தான்.

குமரன் பத்து அடி கூடச் சென்றிருக்க மாட்டான். அவன் ஒரு பரிதாபமான காட்சியைப் பார்த்தான். ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் பசியால் வாடி வருந்தி வருவோர் போவோரிடமெல்லாம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தான். எல்லோரும் அவரவர் போக்கில் போய்க் கொண்டிருந்தார்களே தவிர அவனை யாரும் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. குமரனால் மற்றவர்களைப் போல் இருக்க முடியவில்லை. திரும்பிப் பார்த்தான், தன் தாய் வருகிறாளா என்று. அத்தை வீட்டு வாசல் வரையிலும் அவள் தலை தெரியவில்லை. துணிச்சலுடன் தன் டிபன் பாத்திரத்தைத் திறந்து அதில் அம்மா வைத்திருந்த சர்க்கரைப் பொங்கல், தயிர்ச் சாதம் எல்லாவற்றையும் அப்படியே குருட்டுப் பிச்சைக்காரனின் பாத்திரத்தில் கொட்டி விட்டான். சட்டென்று அவனுக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. ஒரு வேளை அம்மா வந்து டிபன் பாத்திரத்தைத் தன் கையில் வாங்கிக் கொண்டுவிட்டால்? காலிப் பாத்திரத்தைத் தூக்கியதும் உடனே அவளுக்குத் தெரிந்துவிடாதா? அவனுடைய சமயோசித புத்தி அவனுக்குக் கை கொடுத்தது. பாதையில் குவிந்திருந்த சரல் மணலை அப்படியே அள்ளிப் போட்டுத் தன் டிபன் பாத்திரத்தை நிரப்பிக் கொண்டான். சற்று நேரத்துக்கெல்லாம் அவன் அம்மா அவனைப் பின்தொடர்ந்து இரைக்க இரைக்க ஓடி வந்தாள். ''குமரக் கண்ணு! அத்தையோடு இரண்டு வார்த்தை பேசிவிட்டு வருவதற்குள் நேரமாகி விட்டது. இப்படிக் கொடு, பாத்திரத்தையும், பையையும்'' என்று அவளாகவே குமரன் கையிலிருந்து அவற்றைப் பிடுங்கிக் கொண்டாள். குமரன் மனத்துக்குள் தான் முன் ஜாக்கிரதையாகப் பாத்திரத்தில் மணலை நிரப்பி வைத்ததை நினைத்து நிம்மதியடைந்தான்.

குமரனைப் பள்ளியில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு, தாய் வீடு திரும்பினாள். படிப்பில் அன்று அவனுக்கு நாட்டம் செல்லவேயில்லை. தான் செய்தது நல்ல காரியம்தான் என்றாலும் கூடத் தாயிடம் மறைத்து ஒரு விஷயம் பண்ணிவிட்டோமே என்று மனம் சஞ்சலப்பட்டது.

உச்சி வேளை வந்தது. பள்ளி மணி அடித்தது. எல்லா மாணவர்களும் பசியுடன் அவரவர்கள் எடுத்து வந்திருந்த உணவுகளை எடுத்து வைத்துக் கொண்டு சந்தோஷமாக உணவருந்த அமர்ந்தனர். குமரன் மட்டும் அவன் இடத்திலேயே சோர்வுடன் உட்கார்ந்திருந்தான். பசி அவனை வாட்டவில்லை. அம்மாவிடம் மறைத்து விட்டதை



நினைத்துத்தான் அவன் மனம் அல்லல் பட்டது. கூடவே அந்தப் பிச்சைக்காரனின் பசியால் வாடியிருந்த முகமும் தான் கொடுத்த உணவை அவன் ஆவலுடன் வாயில் அள்ளி அள்ளிப் போட்டுக்கொண்ட விதமும் அவன் மனக் கண் முன் தோன்றி மறைந்தன.

''ஏண்டா குமரா, ஏதோ கோட்டையைப் பிடிக்கிறவன் மாதிரி உட்கார்ந்திருக்கிறாயே, நீ சாப்பிடவில்லையா?'' என்று அவன் நண்பர்கள் கேட்டதற்கு ''வயிற்று வலி'' என்று சுருக்கமாக ஒரு பொய்யைச் சொல்லிக் கொண்டான்.

மாலை நேரம் நெருங்க நெருங்க அவனைச் சஞ்சலப்படுத்திக் கொண்டிருந்த நினைவு அலைகள் சற்றே ஓய்ந்தன. பள்ளி மணி அடித்ததும் எல்லோரும் கும்மாளமும் இரைச்சலுமாக வீடு நோக்கிக் கிளம்பினார்கள். குமரன் டிபன் பாத்திரத்தில் நிறைந்திருந்த மணலைக் கொட்டவும் மறந்தவனாகத் தன்னை அழைத்துச் செல்ல வந்திருந்த வேலைக்காரியுடன் வீட்டுக்குக் கிளம்பினான்.

அம்மாவைப் பார்த்ததும் அவனுக்கு மறுபடியும் காலையில் நடந்த சம்பவம் யாவும் நினைவுக்கு வந்தன.

அம்மாவின் சோர்வும் கவலையும் கொண்ட முகத்தைப் பார்த்ததும்தான் காலையில் பண்ணிய செய்கை அம்மாவுக்குத் தெரிந்து விட்டதோ என்று அச்சம் கொண்டான்.

இனிமேலும் அவனால் வாளாவிருக்க முடியவில்லை. ஓடிவந்து தாயின் கால்களைக் கட்டிக் கொண்டு ''அம்மா! என்னை மன்னித்துவிடு. நான் காலையில் உன்னைக் கேட்காமல் செய்தது தவறுதான். அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்ததும் எனக்குப் பரிதாபமாக இருந்தது'' என்று சொல்லித் தான் செய்ததை அப்படியே சொல்லி விட்டான்.

தாய் அவன் சொல்லியவற்றை வியப்புடன் கேட்டுக் கொண்டிருக்கும்போது

வேலைக்காரி தனம் ஓடிவந்து, ''அம்மா! நம்ம தம்பியின் டிபன் பாத்திரத்தில் ஒரே மணலா அடைத்து வைத்திருந்ததா! அதை கீழே கொட்டினபோது ஐயாவோட மோதிரம் 'ணங்' என்று அதிலேயிருந்து கீழே விழுந்திச்சம்மா'' என்று கூறிக் கொண்டே மோதிரத்தைக் கொடுத்தாள்.

மோதிரத்தைக் கண்ட குமரனின் தாயின் முகம் மகிழ்ச்சிக்குப் பதிலாகக் கடுமையாக மாறியது. ''குமரா! உன் அப்பா மாடியில் இருக்கிறாரா என்று பார். காலையிலிருந்தே நாங்கள் அப்பாவின் வைர மோதிரம் காணவில்லையே என்று தவித்துக் கொண்டிருக்கிறோம். இவள்தான் அதைத் திருடிவிட்டு ஏதேதோ பிதற்றுகிறாள். கேட்கிற வழியாகக் கேட்டால் உண்மையைத் தானே சொல்லி விடுவாள்'' என்று கோபாவேசமாகக் கூறினாள். சற்று நேரமாக இவை யாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த குமரனின் தந்தை சிரித்துக் கொண்டே ''லக்ஷ்மி! பதற்றப்படாதே! சற்றுப் பொறுமையாகக் கேள். நான் உனக்கு விளக்கமாகச் சொல்கிறேன். நேற்று இரவு குமரனின் பிறந்த நாளுக்காகக் கறிகாய் பழங்கள் முதலியவை வாங்கி வந்து கொண்டிருக்கும்போது பையின் கைப்பிடி அறுந்து எல்லாம் கீழே கொட்டிவிட்டன. எங்கே கொட்டியது தெரியுமா? குமரன் சொன்ன அதே மணல் மேட்டில்தான். நான் மணலில் கொட்டிய சாமான்களை அப்படியே அள்ளிப் பையில் போட்டுக் கொண்டேன். அப்பொழுதுதான் விரலிலிருந்து மோதிரம் நழுவிக் கீழே விழுந்திருக்க வேண்டும்'' என்றார்.


குமரனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. குமரனின் அம்மா, ''தனம்! நான் அவசரப்பட்டு உன்னைத் தவறாக நினைத்து விட்டேனம்மா'' என்று தன் தவற்றுக்காக வருந்தினாள். தனம், ''பரவாயில்லையம்மா! நம்ம சின்னய்யாவின் நல்ல குணத்துக்குத்தான் மோதிரம் திரும்பக் கிடைத்தது!'' என்றாள்.

எல்லோரும், ''குமரா! உன் கருணைக்குக் கடவுள் தந்த பரிசடா'' என்று சொல்லி அவனைக் கொண்டாடினார்கள்.

காந்திஜியின் பதில்!

ஒரு முறை காந்திஜி தென் ஆப்பிரிக்காவில் மக்களுக்குச் சேவை செய்து கொண்டிருந்தார். அவர் அங்குள்ள இந்திய மாணவர்களுக்காக ஒரு பள்ளிக்கூடம் நடத்தி வந்தார். மாணவர்களும் மிக நன்றாகக் கல்வி பயின்றனர். நம் இந்தியாவில் கோபாலகிருஷ்ண கோகலே என்பவர் மிகச் சிறந்த தேசபக்தி உடையவர். அவர் காந்திஜியின் அழைப்பின் பேரில் தென் ஆப்பிரிக்காவில் உள்ள பள்ளியைப் பார்ப்பதற்குச் சென்றார். கோகலே அவர்களுக்குக் கணிதம் மிகப் பிடித்தமானது. ஆகவே அங்குள்ள மாணவர்கள் கோகலே கணிதத்தில் கேள்வி கேட்டால் சரியாகப் பதில் சொல்வதற்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டனர்.

கோகலே பள்ளியைச் சுற்றிப் பார்த்தார். பிறகு காந்திஜியும் அவரும் ஒரு வகுப்புக்குள் சென்றனர். சிறிது நேரம் அவர்களிடம் படிப்பைப் பற்றிக் கேட்டுவிட்டுக் கோகலேஜி ஒரு மாணவனிடம் கேட்டார்: ''தம்பி, நீ ஒரு காட்டில் உன் அப்பா அம்மாவுடன் சென்று கொண்டிருக்கிறாய். அப்பொழுது எதிரில் ஒரு பசித்த சிங்கம் பாய்ந்து வருகிறது. நீ உன் அம்மாவைக் காப்பாற்ற நினைத்தால் சிங்கம் அப்பாவைக் கொன்றுவிடும். அப்பாவைக் காப்பாற்ற நினைத்தால் அம்மாவைக் கொன்று தின்றுவிடும். இப்படிப்பட்ட நிலைமையில் நீ என்ன செய்வாய்?''



மாணவன் இக் கேள்வியைக் கேட்ட மாத்திரத்தில் திகைத்து நின்றான். கணிதத்தில்தான் கேள்வி கேட்பார் என்று அவன் தயாராய் வந்திருந்தான். எனவே, திகைத்துப் போய்ப் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தான். வகுப்பில் உள்ள எந்த மாணவர்க்கும் இக்கேள்விக்குச் சரியான பதில் சொல்லத் தெரியவில்லை. இதைப் பார்த்த காந்திஜி உடனே பதில் சொன்னார்: ''நான் நேராகச் சிங்கத்திடம் சென்று என் உயிரைக் கொடுப்பேன். இப்படிச் செய்வதினால் என் அப்பா அம்மா இருவரின் உயிரும் காப்பாற்றப்பட்டுவிடும்!''

— சரோஜா ரங்கராஜன்



சமையலுக்குப்
பெருந்துணை
ஓய்வில்லா தாய்மார்கள் சுவையான சமையல் செய்ய
சுலபமான வழி! இந்த 3 பெருந்துணைகளைப் பின்பற்றி, பல்வேறு
இன்பமூட்டும் தின்பண்டங்களைத் தயாரித்து மகிழுங்கள்!......
Brown & Polson Cornflour
பிரவுன் & போல்ஸன்
கார்ன்ஃப்ளவர்
கபாப், சமோசா,
பட்டீஸ் ஆகியவற்றை
அதிமெல்லியதாகவும்
மொரமொரப்பாகவும்
ஆக்குகின்றது. குழைவான
சுவைமிகு சூப், கிரேவி
ஆகியவற்றைக்
கெட்டியாகத்
தயாரிக்க உதவுகிறது.
பிரவுன் & போல்ஸன்
வெரய்ட்டி
கஸ்டர்டு பவுடர்
6 இனிமையான சுவை
வகைகள்! குடும்பத்-
தினரை மகிழ்விக்க
புட்டிங், பாயசம், சபடி
ஆகிய பல்வேறு
இன்சுவையுள்ள
பண்டங்கள் தயாரிக்க
சாலச் சிறந்தது.
6
Brown & Polson
REX
BAKING POWDER
ரெக்ஸ்
பேகிங் பவுடர்
கேக், பிஸ்கோத்து,
பக்கோடா, பூரி,
குலாப் ஜாமூன் ஆகிய-
வற்றை சுவைபட
அதிமென்மையாகத்
தயாரிக்க உதவுகிறது.
சிறிதளவே சிறப்பாகச்
செய்து முடிக்கிறது!
உங்கள் சமையல் உன்னதமாய் இருக்க
உயர்ந்த சாமானே உபயோகியுங்கள்
பிரவுன் & போல்ஸன் மற்றும் ரெக்ஸ்
தரமுயர்ந்த தயாரிப்புகள்
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு
பக்குவப்படுத்தப்பட்டவை—கிடைப்பனவற்றிலேயே சிறந்தவை.
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா)
பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். ஸோமானி மார்க்,
பம்பாய் 400 001.

அறிவும் திறனும்

ஜெமினி ஏ.பாஜி





பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஜப்பானில் ஒரு பிரமுகர் இருந்தார். அவருக்கு அறிவும், அழகும் உள்ள மகள் ஒருத்தி இருந்தாள். அவளைப் பற்றி அறிந்த பெரிய மனிதர்கள் பலர் அவளை மணக்க விரும்பினார்கள். ஆனால் அவள் யாரையும் விரும்பவில்லை.

நாள் செல்லச் செல்ல அவளுடைய தந்தைக்குக் கவலை வந்துவிட்டது. ''விரைவில் மணம் செய்து கொள்'' என்று அவர், தம் மகளை வற்புறுத்திக் கொண்டிருந்தார். அவளோ காலம் கடத்திக் கொண்டே வந்தாள். கடைசியில் தந்தையின் பிடிவாதம் வென்றது. மகள் திருமணத்துக்குச் சம்மதித்தாள். அதற்கு அவள் போட்ட நிபந்தனை இதுதான்: ''எனக்கு வரன் தேடுங்கள். மணமகன் யாரா யிருந்தாலும் சரி. வரும் மாப்பிள்ளை, காகிதத்தில் காற்றையும் நெருப்பையும் பிடித்துத் தர வேண்டும்'' என்றாள்.

இதைக் கேட்ட தந்தையின் உற்சாகம் குறைந்துவிட்டது. கூடவே சிரிப்பும் வந்தது. ''உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. உன் நிபந்தனையைக் கேட்டால் சாமானிய மனிதன்கூட உன்னை மணந்து கொள்ள மாட்டான்'' என்றார்.

அதற்கு அவள், ''அதெல்லாம் எனக்குத் தெரியாது. என்னை மண மேடையில் பார்க்க வேண்டும் என்றால் நீங்கள் இந்த நிபந்தனையை ஒப்புக் கொண்டுதான் ஆக வேண்டும்'' என்று சொல்லிவிட்டாள்.

வேறு வழி இல்லாததால் தந்தை இந்த விஷயத்தைப் பறையறையச் செய்துவிட்டார். அவளை மணக்க விரும்பிய சிலர் இதைக் கேட்டுவிட்டு ''அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது'' என்றார்கள். சிலர் அவளைப் பற்றிய ஆசையையே விட்டுவிட்டார்கள். சிலர் அவள் தங்களை அவமானப்படுத்திவிட்டதாகச் சீறினார்கள்.


அநேகமாகத் திருமணம் நின்று விட்டது போலவே ஆகிவிட்டது. இந்தப் பெண்ணின் வீட்டுக்குப் பக்கத்திலேயே அழகிய வாலிபன் ஒருவன் இருந்தான். அவனுக்கு உற்றார் உறவினர் யாரும் இல்லை, பரம ஏழை. ஆனால் கூரிய அறிவு படைத்தவன். வண்ண, வண்ணக் காகிதங்களால் பல விளையாட்டுப் பொருள்கள் செய்து சிறுவர் சிறுமியருக்கு விற்று அதனால் வாழ்ந்து வந்தான். அவனும் இந்தத் தண்டோராவைக் கேட்டான். அந்த அழகியை அவன் பல முறை பார்த்திருக்கிறான். அவளிடம் காதல்கூட அவனுக்கு உண்டு. ஆனால், ''எட்டாப் பழத்துக்குக் கொட்டாவிவிடக்கூடாது'' என்று பேசாமல் இருந்துவிட்டான்.

தண்டோராச் செய்தி அவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. அழகி கேட்ட இரண்டு பொருள்களையும் தயாரித்து அவளிடம் கொண்டுபோய்க் கொடுத்தான். அவற்றைப் பெற்றுக் கொண்ட அழகி மகிழ்ச்சியால் சிறு குழந்தை போல் கூத்தாடினாள்.

''உடனே என்னை மணந்து கொண்டு உன்னுடன் அழைத்துச் செல்'' என்று சொல்லி உபசரித்து அவனை வேண்டினாள்.

அவள் தன் தந்தையிடம் அந்த இளைஞனைப் பற்றிச் சொல்லி, அவனுக்குத்






தன்னை மணம் செய்து கொடுக்கும்படி கேட்டாள். அதற்கு அவர் ''அந்தப் பரதேசிப் பயலுக்கு உன்னைக் கொடுத்தேனுனல் என் மானம், மரியாதை எல்லாம் போய் விடும். உயிர் போனுலும் அதைச் செய்ய மாட்டேன்'' என்று கூச்சல் போட்டார். அவளோ பிடிவாதமாக இருந்தாள்.

கடைசியில் திருமணம் நடந்தேறியது. அவர் போட்ட நிபந்தனை நிறைவேறியதா என்று அறிந்துகொள்ளத்தானே என்னவோ ஏராளமான மக்கள் திருமணத்துக்கு வந்திருந்தார்கள்.

அழகி கணவனுடனும் தந்தையுடனும் மேடை மேல் ஏறி வந்தாள். அவள் கையில் இரண்டு பொருள்கள் இருந்தன. ஒன்று — காகிதத்தால் செய்யப்பட்ட காகித விசிறி. ''இதோ பாருங்கள். காகிதத்திலிருந்து காற்று'' என்று விசிறிக் கொண்டாள். ''இதோ காகிதத்தில் நெருப்பு'' என்று மற்றொரு கையைத் தூக்கிக் காட்டினுள். அந்தக் கையில் அழகான வண்ணக் காகிதத்தால் செய்த காகிதக் கூண்டு ஒன்று இருந்தது. அதனுள் ஓர் அகல் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அவற்றைக் கண்ட எல்லோரும் ''ஆகா! அற்புதம்! அற்புதம்!'' என்று மணமக்களை வாழ்த்திவிட்டுச் சென்றனர். இப்போதும் அந்த ''ஷிங் சூ சாய்'' அழகியின் இனிய நினைவின் காரணமாகத்தான் ஜப்பானிய அழகிகள் எப்பொழுதும் கையில் விசிறியை வைத்துக் கொண்டிருக்கிறுர்கள். தீபாவளியன்று மூங்கிலால் செய்த காகிதக் கூண்டை உயர்த்தி அவள் ஞாபகார்த்தமாக ஆகாய விளக்கு ஏற்றுகிறுர்கள்.



விஞ்ஞான ஆசிரியர் : கோபு! நீ சொல்லு. அரிதில் கடத்தி, எளிதில் கடத்தி என்றால் என்ன?

கோபு : ஹாஜி மஸ்தானைத்தான் சார் கேட்கணும்!

— எம். ஆர். மூர்த்தி



டாக்டர் : (ஜுரத்தைப் பார்த்து) நூற்று இரண்டு டிகிரி இருக்கிறது.

விளையாட்டு வீரர் : இதில் உலக ரிகார்டு எவ்வளவு டாக்டர்?



ஆசிரியர் : உன் விடைத்தாளில் பரீட்சை எழுதாமல் பின்னால் உள்ள பையனைப் பார்க்கிறாயே, காப்பி அடிக்கவா?

மாணவன்: இல்லே சார்! கேள்வித் தாளில் 'பின் பக்கம் பார்க்க' என்று போட்டிருந்தது. அதனால்தான்.


—க. ராஜேந்திரன்

சிரிக்கச்சிரிக்க



ராமு : ஏண்டா கிட்டு, அந்த புதுப் பையன் ரொம்ப முன் கோபி போல இருக்கே!

கிட்டு : அவன் பேரே 'கோபி'யாச்சே!



பாலு : ஏண்டா மணி நம்ம தமிழ் வாத்தியார் ரப்பரை "இரப்பர்"னு எழுதச் சொல்றார்?

மணி : எப்போதும் நாம ரப்பர் கொண்டு வராமல் அடுத்தவனை ரப்பர் கேட்டுக் கேட்டு வாங்கறதினாலே இருக்கும்!—ஆர். பி. சாரதி

'கோகுல'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர் : கே. ஆர். ஆத்மநாதன்


தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள...
நீயும் ஏன் திருப்பி அடிக்க வில்லே? நீ தற்காப்பு செய்து கொள்ளக் கற்க வேண்டும்.
அல்லது அடியை மணிக்கட்டால் தடுக்கலாம்.
முன்கையால் அல்லது தோளால் தாக்குதலைத் தாங்கிக்கொள்ளலாம்.
புரிந்ததா ராஜு. குத்துச் சண்டையில் இது முதல் பாடம்— தற்காப்பு செய்துகொள்ளக் கற்பது.
அடடே.., நேரமாகி விட்டது! படிக்கப் போ ராஜு. பிரஷ்கொண்டு பற்களைத் துலக்கினாயா?
ஓ! தினந்தோறும் காலையில் துலக்குகிறேனே, அப்பா!
வா, நாமிருவரும் போர்ஹென்ஸ் பற்பசையால் பல் துலக்குவோம்.
சரி, அப்பா.
Forhans
FOR THE GUMS
போர்ஹென்ஸ்
பல் வைத்தியர் ஒருவரால் உருவாக்கப் பட்ட பற்பசை.

50 F-203 TM



